ஓம் தத்ஸத் பிரஹ்மணேநமஃ.

# தருக்ககௌமுதி.

இது

தஞ்சைமாநகரம்

வெ. குப்புஸ்வாமிராஜு அவர்களால்

வடமொழியினின்றும்

மொழிபெயர்க்கப்பட்டு,

தஞ்சை

வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்

அவர்களால்,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விளம்பி ௵.

*All Rights Reserved.*

விலை அணா ௪.

V. B. SUBRAHMANYASARMA
TAMIL-PANDIT.

## விற்பனைக்குள்ள புஸ்தகங்கள்.

| | | | ரூ. அ. பை. |
|---|---|---|---|
| தத்துவமஸிமகாவாக்கிய உபதேசம். | | ... | 0—2—0 |
| விசாரசந்திரோதயம் (விருவிடை) | | ... | 1—0—0 |
| ஹடயோகப்பிரதீபிகை (சம்ஸ்கிருத மூலமும் தமிழுரையும்) | ... | ... | 1—8—0 |
| சூதசங்கிதை மூலம் தமிழ் | ... | ... | 1—8—0 |
| பிரமகீதை உரை | ... | ... | 2—8—0 |
| ரிபுகீதை | ... | ... | 2—8—0 |
| தேவாரத்திரட்டு | ... | ... | 0—2—0 |
| அவதூதசம்வாதம் உரை | ... | ... | 0—2—0 |
| காருஜீவவாதக்கட்டளை | ... | ... | 0—1—0 |

அடியிற் கையொப்பமிட்டவர்களிடம் நேர்த்தியான பலவித ரப்பர் முத்திரைகளும் பெற்றுக்கொள்ளலாம்.

வி. கோவிந்தன் அண்டு பிரதர்ஸ்,
ரப்பர் முத்திரை செய்வோர்,
தஞ்சாவூர்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 19 | 6 | சமானிய | சாமானிய |
| ,, | 14 | சமயவாயி | சமவாயி |
| 21 | 23 | சமயவாய | சமவாய |
| 25 | 11 | வியாகம் | விபாகம் |
| 30 | 5 | மற்றோர் | ச. மற்றோர் |
| 30 | 10 | வெதிரேகங்களி | வெதிரேகியி |
| 30 | 12 | வெரேகத்தில் | வெதிரேகத்தி |
| 31 | 21 | விடைய | விடய |
| 39 | 12 | குடை | குட |
| 44 | 8 | வதாகாது. | வதாகாது, |
| ,, | 20 | அதுவ | அதுபவ |
| 51 | 17 | ஒன்றிலொ | ஒன்றிலொன் |

கணபதிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

---

இந்நூலாசிரியர் மாணாக்கர்
தஞ்சை - வலம்புரி
அ. பாலசுப்பிரமணியப்பிள்ளை
இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

பொன்மலர் பொதுளிய பொலிகற் பகத்தின்
மன்பெரு நிழற்கீ ழரசுவீற் றிருக்கும்
வானுயர் சிகரக் கிரிப்பறை யெறிந்த
கானுயர் தொங்கற் கவின்பெறு குலிசத்
திந்திர னுடைம ரியற்றுதல் வேண்டி
யொளிபொற் சிலையென வோங்குபொற் கிரிக
டொக்கென விளங்குந் தூமணி குயிற்றி
மன்பெருஞ் சிறப்பின் வகையுளி புரிந்த
விட்புலத் தவர்க்குக் கட்புலன் கதுவா
மேனிலை மாடமாட் டிந்துநற் காந்தத்
தானிலை பெறச்செய் யணிநிலா முற்றந்
தன் கா லன்புட னுடவர் வடமே
யெழின்முலைக் கிணையு மிடுகிடைக் கொம்பரோ
டைமபரி யங்கத் தமர்தர விண்மிசை
மதியந் தோன்ற வண்புனற் பெருக்கிப்
பாற்கடற் கண்மேணை பள்ளிகொண் டருளுந்
திருமா லொப்பச் செய்துபின் னிழிந்தே

யமையாப் பல்வள மமைதரச் சுரக்குஞ்
செஞ்சொற் றமிழார் தஞ்சைமா நகரோ
னாரியத் தமிழ்முத லாயுள மொழியு
ளிடம ரிலக்கண மிலக்கிய தருக்க
நன்குற வுணர்ந்த நாவலர் பெருமான்
கானம ரிதழிக் கவின்றொடை யமுதப்
பான்மதி யொடுசெம் பவளவார் சடையி
னெருக்குவெங் காளத் தின்னர வணிந்த
புராதன முக்கட் புண்ணிய மூர்த்தி
பராபர சுயம்புப் பண்ணவ னருளாற்
கழறிய வெல்லாக் கலையுளுஞ் சான்ற
வேதாந் தத்து மெய்ப்பொரு ளாகு
மேத மகற்று மிணையிலா ஞான
மொன்றே பயன்றரு மென்றுணர் பெரியோன
காமம் வெகுளி மயக்கெனக் கலையுந்
தீமையை யிரியச் செற்றுள வறிவோ
னுதவிகு முலகோ ருஞற்று புன்மையை
விதிமுறை கூறி விலக்கிடை றகுலத்தோன்
றகுநல் விசார சந்திரோ தயமும்
ஹடயோ கப்பிர தீபிகை யென்னுந்
திடமில் யோகியர் திருக்கிரித் துத்தெருட்
டுண்மை நூனு முபநிட தத்துள
மன்றத் துவமஸி மாவாக் கியவுப
தேசமு மென்னச் செப்புயர் நூல்கண்

# சிறப்புப்பாயிரம்.

மொழிபெயர்த் தருளிய முன்னூறு மேலோ
னயர்விலா தன்பாற் கருங்கலை புணர்ந்து
முயர்குப்பு சாமியென் றுரைக்குநற் பெயரோன்
மெய்ப்பொரு ளனைத்தும் வேதாந் தக்கலை
யுணரு மவாவி னாக்கமோ டமரு
முண்மை யன்போ டொழுக்கறி வுடைய
நற்குணத் தோர்க்கு நாடொறு தனமா
வழங்கு திரைக்கட லாடையா ருலகத்
தான்மப் பெருக்க மருங்கதி புறுவான்
சாதன வைதிக சாத்திர மாறனுட்
டயங்கு புகழ்க்கோ தமன்கணா தன்னெனு
மைந்தறி வடக்கிய வருமறை முனிவர்
வகுத்துள நியாயம் வைசே டிகமெனுந்
தருக்க நூலிற் றகைமைசால் புலமை
இல்லனாக்கி பாற்கர ரிளையவர்க் காகச்
சோதனை யின்றிச் சொல்லருஞ் சிறப்பாற்
பதார்த்த மேழையும் பகுத்துணர்த் தியவித்
தருக்கவெள முதினையத் தனிவரைப் பொதியக்
கண்டொடு பாலுங் கைப்புறச் சுவைத்தாய்த்
தந்தருள் செவ்வித் தமிழ்நடை யதனாற்
சொற்பொரு ளின்பொடு தூயவின் னருளி
னியற்றின னிந்த விறும்பூ
தெம்ம னோரா லியம்பலாந் தகைத்தே.

V.B. SUBRAHMANIYASARMA

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| முகவுரை 17-வரி | | இழிந்து | இழித்து |
| 19 | 11 | அது படத்திற்குத் தந்துக்களும், கடத்திற்குக் கபாலங் (ஓடு) களும், தம்மிலுள்ள உருவமுதலியவற்றிற்குப் படம் குடமுதலியனவும் | அது தந்துக்கள் படத்திற்கும், கபாலங்கள் கடத்திற்கும், படம் குடமுதலியன தம்மிலுள்ள உருவமுதலியவற்றிற்கும் |
| 20 | 6 | காரணைம் | காரணம |
| 24 | 6 | அதிவியாத்தி | அவியாத்தி |

* கௌதமர்.

V. B. SUBRAHMANIYASARMA

சிவமயம்.

# தருக்ககௌமுதி.

காப்பு.

விநாயகர்.

எந்த வினையு மிரிந்தோடச் செய்யுமொரு
தந்திமுகத் தண்ணல் சரண்.

திருமால்.

பாரார் மாநதர் பயநதன்னிற் பண்பாய் நீங்கிச் சுகமுறவே, யோரார் மீன மாதிவடி வெடுத்த வாசு தேவனைநற், காரார் முகிற்கேழ் நெடியோனைக் கல்விக் காதி காரணனைச், சீரார் பொறிமண் மகட்புணையுஞ் செல்வன் றன்னைச் சேவிப்பாம்.

பரமாசாரியர்.

* அக்க பாத ரதன்பின் கணாதர்
தக்க விவர்தங் தாட்களிற் பணிந்து
தர்க்ககௌமுதியைத் தமிழ்மொழி தன்னான்
மிக்கிளை ஞர்க்கா விளம்புவன் யானே.

---

* கௌதமர்.

## நூல்.

## பதார்த்தம்.

க. * ஆண்டு. அபிதேயங்கள் பதார்த்தங்கள். (அபிதேயம் பெயரிட்டு வழங்கற் பாலது.) ⊙ அவைகளும் திரவியம் (பொருள்), குணம் (பண்பு), கருமம் (தொழில்), சாமானியம் (பொதுமை), விசேடம் (சிறப்பு), சமவாயம் (ஒற்றுமைச் சம்பந்தம்), அபாவம் (இன்மை) என ஏழே.

அவற்றுள்:—க. ¶ திரவியம் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, $ ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என்னும் ஒன்பதேயாம்.

உ. குணம் உருவம், இரசம் (சுவை), கந்தம் (நாற்றம்), பரிசம் (ஊறு), சங்கை (எண்), பரிமாணம் (அளவு), வேற்றுமை, சையோகம் (கூட்டம்), விபாகம் (பிரிவு), பரத்துவம் (முன்மை), அபரத்துவம் (பின்மை), புத்தி (அறிவு), சுகம் (இன்பம்), துக்கம் (துன்பம்), இச்சை (காமம்), துவேஷம் (வெகுளி), பிரயத்தனம் (முயற்சி), குருத்துவம் (திண்மை), திரவத்துவம் (நெகிழ்ச்சி), சிநேகம், சம்ஸ்காரம் (வாசனை), தருமம் (புண்ணியம்), அதர்மம் (பாவம்), சத்தம் (ஓசை) என இருபத்து நான்கு.

---

* தருக்கசெளமுதியின்கண். ⊙ திரவியாதி யாறையும் பாவபதார்த்தமெனவும், அபாவமொன்றனையும் அபாவபதார்த்த மெனவும் பதார்த்தங்களை யிருவகையாக்கியுங் கூறுவர். ¶ ஈண்டுத் திரவியத்தன்மை, குணத்தன்மை, கருமத்தன்மை சாதி. ஏனைய சாமானியத்தன்மை முதலியன உபாதி. (உபாதி அகண்டதர்மம்.) $ ஆகாயத்தன்மை, காலத்தன்மை, திசைத்தன்மை உபாதி. ஏனைய சாதி.

௩. கருமம் எழுதல், விழுதல், வளைதல், நிமிர்தல், நடத்தல் என ஐந்தே.

௪. சாமானியம் பரம் அபரமென இருவகைத்து.

௫. விசேஷம் நித்தியத்திரவியங்கள் அநந்தமாகலின் அவற்றின்கண் ணிருப்பனவாகிய விசேஷங்களும் அநந்தமேயாம்.

௬. சமவாயம் ஒன்றே

௭. அபாவம் சம்சர்க்காபாவம் அந்நியோந்நியாபாவமென இருவகைத்து.

## திரவியாதிசாமனியவிலக்கணம்.

க. பொருண்மைச் சாமானிய முடையதாதல், குணமுடையதாதல் திரவியம்.

உ. குணத்தன்மைச் சாமானிய முடையதாதல், திரவியம் கர்மம் என்னும் இரண்டற்கும் வேறாய்ப் பொதுவியல்புடையதாதல் குணம்.

௩. கருமத்தன்மைப்பொதுவியல்புடையதாதல், அசைவுவீடினதாதல் கருமம்.

௪. நித்தியமாய் ஒன்றாய்ப் பலவற்றிற் சமவேதித்திருப்பது, சாமானியம்.

௫. இது இதனினும் வேறு என்று வேறு பிரித்தறியும் புத்திமாத்திரத்திற்கு ஏது, விசேஷம்.

௬. நித்திய சம்பந்தம் சமவாயம்.

எ. பாவத்திற்கு(உண்மைக்கு)வேறாயது, அபாவம்.(க)

திரவியாதி சாமானியவிலக்கணம் முற்றிற்று.

---

## திரவியாதி விசேடவிலக்கணம்.

### திரவியம்.

க. பிருதிவித் தன்மைப் பொதுவியல்புடையது, பிருதிவி. உருவம், இரசம், கந்தம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரம் என்னும் பதினான்கு குணங்களுடையதாம். அது நித்தியம், அநித்தியம் என இருவகைத்து. நித்தியம் பரமாணுவடிவம்; அநித்தியம் காரியவடிவம். அதுவும் (காரியமும்), சரீரேந்திரிய விடய வேறுபாட்டால் மூவகைப்படும்.

(க) சரீரமும் யோநிஜம், அயோநிஜம் என இருவகைத்தாம். அவற்றுள், (க) யோநிஜம் நம்மனோர்க்குள்ள பிரத்தியக்ஷசித்தமான சுக்கில சுரோணிதக் கலப்பினாலாகியது. (உ) அயோநிஜம் சுக்கில சோணிதக் கலப்பின்றித் தர்ம விசேஷத்தோடு கூடிய பரமாணுவினாலுண்டாகியது. அது தேவரிஷிகளாகிய நாரதர் முதலியோருக்குள்ளது.

(உ) இந்திரியம் கந்தத்தைக் கிரகிக்கும் கிராணம். அது நாசிநுனியிலிருப்பது.

(௩) விடயம், மண் கல் தாவர மென்னும் பேதத்தால் மூவகைத்து. மண்ணுங் கல்லும் பிரசித்தம். தாவரம், மரங்கொடி முதலியன. (உ)

உ. அப்புத் தன்மையாகிய பொதுவியல்புடையது, ஜலம். உருவம், இரசம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், குருத்துவம், திரவத்துவம், சிநேகம், சம்ஸ்காரம் என்னும் பதினன்கு குணங்களுடையதாம். அது நித்தியம் அநித்தியமென இருவகைத்தாம். நித்தியம் பரமாணு லக்ஷணம்; அநித்தியம் காரியலக்ஷணம். அதுவும் சரீரேந்திரிய விடயவேறுபாட்டால் மூவகைப்படும். (க) சரீரம் வருணலோகப்பிரசித்தமாகிய அயோநிஜமே. (உ) இந்திரியம், இரசத்தைக்கவரும் இரசனம் (சிங்நுவை). அது இரசனையி (நாவி) னுனியிலிருப்பது. (ங) விடயம், ஆறு கடல் முதலியனவும் இமகரமுதலியனவுமாம். (ங)

ங. தேயுத்தன்மைப் பொதுவியல்புடையது, தேயு. உருவம், பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சம்ஸ்காரம் என்னும் பதினொருகுணங்களுடையதாம். அதுநித்தியம், அநித்தியம் என இருவகைத்து. நித்தியம் பரமாணு லக்ஷணம்; அநித்தியம் காரியலக்ஷணம். அதுவும் சரீரேந்திரியவிடயவேறுபாட்டால் மூவகைப்படும். (க) சரீரம் ஆதித்தியலோகத்திற் பிரசித்தமான அயோநிஜம். (உ) இந்திரியம் உருவத்தைக் கவரும் சக்ஷு. அது கண்ணின் கருமணியினுனியிலிருப்பது. (ங)விடயம் பௌமம் (மண்ணினுள்ளது), திவ்வியம் (விண்ணினுள்ளது), ஔதரியம் (வயிற்றினுள்ளது), ஆகரஜம் (சுரங்கமுதலியவற்றினுள்ளது) என்னும் வேறு

பாட்டால் நான்கு வகைத்து. பார்த்திவ (பிருதிவியின் காரியமான) இந்தனத்தையுடைய பிரசித்தமான நெருப்பு முதலியன, மண்ணிலுள்ளது. அப்பை இந்தனமாகவுடைய சூரியன், மின்னல், வடவனல் முதலியன விண்ணிலுள்ளது. உண்டவுணவு பரிணமித்தற்கு ஏதுவாயுள்ள ஜாடராக்கினி வடிவினது, வயிற்றினுள்ளது. பொன் வெள்ளி முதலியன சுரங்கங்களினுள்ளது. (௪)

௪. வாயுத்தன்மைப் பொதுவியல்புடையது, வாயு. பரிசம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், (வேகமென்னும்)சம்ஸ்காரம் என்னும் ஒன்பது குணங்களுடையது. அது நித்தம் அநித்தம் என இரு வகைத்து. நித்தம் பரமாணுரூபம்; அநித்தம் காரியரூபம். அநித்தம் சரீரேந்திரியவிடய பிராணபேதத்தால் நான்கு வகைப்படும். (க) சரீரம் வாயுலோகத்திற் பிரசித்தமான அயோநிஜமே. (உ) இந்திரியம் பரிசத்தைக் கவரும் உடல்முழுவதும் வியாபித்துள்ள துவக்கு. (௩) விஷயம் (மரமுதலியன அசைதற்கேதுவாயுள்ள) மகாவாயு முதலியன. (௫)

(௪) பிராணன் சரீரத்தினுட் சஞ்சரிக்கும் வாயு. இருதயத்தில் பிராணன், குதத்தில் அபானன், நாபியிலிருப்பது சமானன், கண்டதேசத்திலிருப்பது உதானன், உடன்முழுவதினுமுள்ளது வியானன். அதுவே (பிராணனே) தொழில் வேறுபாட்டால் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்னும் பெயர்களைப் பெறுகின்றது. சரீரத்தில் ஐந்து (வாயுக்கள்) இல்லை; மூர்த்தங்களுக்குச் சமான தேச (ஓரிட) த்திருத்தல் விரோதமாகலின். (௬)

மூர்த்தத்தன்மையினும் நிரவயவம் பரமாணுவாம். அதுவும் அதீந்திரியமே. அஃது 'சாளரத்தின்வழி யுட்புகும் கதிரொளியிற் காணப்படும் நுட்பமான துகள் (திரிசரேணு) எதுவோ, அதன் ஆறுவது பாகம் பரமாணுவெனப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. காரணத்தின் பின்னுண்டாவது, காரியம். அது துவியணுக திரியணுகமுதலிய பேதத்தால் அநந்தவிதமாம். அவற்றுள், இரண்டு பரமாணுக்களின் சையோகத்தால் துவியணுகமும், மூன்று துவியணுகங்களின் சையோகத்தால் திரியணுகமும், நான்கு திரியணுகங்களின் சையோகத்தால் சதுரணுகமும் ஆகும். இவ்வாறாய பஞ்சாணுகமுதலிய போகாயதனமான அந்தியாவயவி (போகத்திற்கிடமான சிற்றவயவமுடையது), சரீரம்; சுக துக்கங்களிரண்டிலொன்று புலப்படத் தோன்றல், போகம்; திரவியத்தை யுண்டுபண்ணாத காரியத்திரவியம், அந்தியாவயவி; சரீரத்தோடு கூடிய ஞான கரணமான அதீந்திரியம், இந்திரியம்; அறியப்படுந்தன்மையிற் போகசாதனமாயுள்ளது, விஷயம்.()

ரு. சத்தசமவாயிகாரணம் ஆகாயம். அது சத்தம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் என்னும் ஆறு குணங்களுடையதாம். அதுவும் இலகுத்தன்மையான் ஒன்றாம். யாண்டுங் காரியங் காணப்படுதலான் விபுவாம்; விபுத்தன்மையான் நித்தியமாம். ஆயினும் அஃது செவித்துளையின் வளைபட்டதாய்ச் சத்தத்தைக் கவருஞ் சுரோத்திரேந்திரியவடிவினதாயிருக்கும். (அ)

சு. சேட்டத்துவகனிட்டத்துவங்களின் ஞானாதீனமான (மூப்பிளமைகளின் உணர்ச்சிவயத்ததான) பரத்துவாபரத்

வங்களால் அநுமிக்கப்படுவது, காலம். அது சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் என்னும் ஐந்து குணங்களுடையதாம். அதுவும் ஒன்ருய் நித்தமாய் விபுவாயிருக்கினும் உபாதிபேதத்தாற் சென்றகாலம், நிகழ்காலம், வருங்கால மென மூவகைப்படுகின்றது. அந்த வியக்தியின் (பொருளின்) துவம்சவிசிஷ்ட (அழிவையடுத்த) காலம் அவ்வியக்திக்கு அதீத (சென்ற) காலமாம். அவ்வியக்தியின் பின்னின்மை முன்னின்மைகளைத் தழுவாத காலம் அவ்வியக்திக்கு வர்த்தமான காலமாம். அவ்வியக்தியின் பிராகபாவ விசிஷ்டகாலம் அவ்வியக்திக்கு வருங்காலமாம். (கூ)

எ. செய்மையண்மைகளின் ஞானுதீனமான பரத்துவா பரத்துவங்களால் அநுமிக்கப்படுவது, திக்கு. அது சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம் என்னும் ஐந்து குணங்களுடையது. அதுவும் ஒன்ருய் விபுவாய் நித்தமாயிருக்கினும், உபாதி பேதத்தாற் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என நான்குவகைப்படும். உதயாசலத்தருகிருக்கும் திக்கு, கிழக்கு. அஸ்தாசலத்தருகிருக்குந் திக்கு, மேற்கு. மகாமேருவை யடுத்த திக்கு, வடக்கு. மகாமேருவான் மறைபட்ட திக்கு, தெற்கு. (கО)

அ. ஆன்மத்தன்மைப் பொதுவியல்புடையது, ஆன்மா. அது சீவேசுவர பேதத்தால் இருவகைப்படும். அநித்தியஞானமுதலியவற்றை யுடையது, ஜீவன். அது சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனம், தர்மம், அதர்மம், (பாவனை யென்னும்) சம்ஸ்காரம் என்னும் பதினன்கு குணங்களு

டையதாம். அதுவும் சுக துக்காதி விசித்திரத் தன்மையால் சரீரங்கடோறும் வேறும். நித்தியஞானாதிகளை யுடையவன், ஈசுவரன். அவன் சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், புத்தி, இச்சை, பிரயத்தனம் என்னும் எட்டுக் குணங்களுடையவன். அவன் ஒருவனே. சரீர வேதுவாகிய அதிர்ஷ்ட (புண்ணிய பாவ) மில்லாமையாற் சரீர மில்லாதவனுமாவன்; அல்லது புருடனது அதிர்ஷ்டத்தால் ஸ்திரீயின் சரீரத்திற்குற்பத்தி யுண்டாதல்போல நம்மனோர்களது அதிர்ஷ்டத்தால் அவ்வீசனது சரீரத்திற்குப் பிறப்புச் சம்பவித்தலால் அவனும் சரீரியாவன் நம்மனோர்களது அதிர்ஷ்டத்தால் முக்தனுக்கும் சரீரோற்பத்தி யுண்டாகுமெனலாகாது; சரீரத்திற் கேதுவாகிய இச்சைமுதலியன ஆண்டு (முக்தரிடத்து) இன்மையான். ஆகையான் சதுர்ப்புஜத்தன்மை முதலியவற்றின் சிரவணம் (ஸ்மிருதியாதிகளில்) பொருந்துகின்றது. ஆன்மா இருவகைத்தாயினும் விபுவும் நித்தியமுமாம். (கக)

௧௨. மனத்தன்மைப் பொதுவியல்புடையது, மனம். அது சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், பரத்துவம், அபரத்துவம், (வேகமென்னும்) சம்ஸ்காரமென்னும் எட்டுக்குணங்களுடையதாம். அதுவே சுகமுதலியவற்றின் ஞானத்திற்குச் சாதனமாகிய இந்திரியமாம். அது உயிர்தோறும் வேறாய் அணுவாய் நித்தியமாயிருக்கும். (க௨)

திரவியவிசேடவிலக்கணம் முற்றிற்று.

## குணம்.

௧. விழிமாத்திரத்தாற்கவரப்படுஞ் சாதியுடையகுணம், உருவம். குணம் என்னுஞ்சொல் பிரபையை நீக்குதற்பொருட்டாம். அது சுக்கிலம் (வெண்மை), கிருஷ்ணம் (கருமை), பீதம் (பொன்மை), இரக்தம்(செம்மை), அரிதம் (பசுமை), கபிலம் (புகைமை) என்னும் பேதத்தால் * அறுவகைப்படும். வெண்மையாதி யாவும் பிருதிவி மாத்திரத்தாம். ஜலத்திற் சொச்சமான (பளபளப்புள்ள) வெண்மையும், தேயுவில்விளக்கமான வெண்மையுமாம். (௧௩)

௨. இரசனை (சிங்ஙுவை) மாத்திரத்தாற் கவரப்படுஞ்சாதியுடையது, இரசம். அது தித்திப்பு, புளிப்பு, கார்ப்பு, காழ்ப்பு, கைப்பு, துவர்ப்பு என்னும் வேறுபாட்டால் அறுவகைத்து. ஆறுவிதமும் மண்மாத்திரத்திலும். நீரில் மதுர மொன்றே.

௩. கிராணமாத்திரத்தாற் கவரப்படுஞ் சாதியுடையது. கந்தம். அது நற்கந்தம் துர்க்கந்தமென இருவகைத்தாம். இருவகைக்கந்தமும் பிருதிவிக்கண்ணேயாம். (௧௫)

௪. தொக்குமாத்திரத்தாற் கவரப்படுஞ் சாதி யுடையது, பரிசம். அது சீதம் (குளிர்ச்சி), உஷ்ணம் (சூடு), குளிர்ச்சியுஞ் சூடுமில்லது என்னும் பேதத்தால் மூவகைப்படும். ஜலத்திற் சீதமும், தேயுவில் உஷ்ணமும், பிருதிவி வாயுக்களிற் சீதோஷ்ணமில்லாததுமாம். (௧௬)

பிருதிவியின்கணுள்ள உருவ முதலிய நான்கும் இருவகைத்தாயினும் அநித்தமும், பாகத்தாற் றோன்றுவனவு

---

* நவீனர் ஆறென்பர். பிராசீனர் சித்திர மொன்றனையுங்கூட்டி எழென்பர். இவற்றின் நியாயம் விரிவஞ்சி விடுக்கப்பட்டது.

மாம்; ஆண்டுத் தேயுவின் சையோகத்தால் (குடத்துள்ள) முன்னைய கருமை முதலியவற்றின் நீக்கத்தில் இரக்த முதலியவற்றின் உற்பத்தி காணப்படுதலான். அதனினும் முன்னுருவ முதலியவற்றை யழித்து வேற்றுருவ முதலியவற்றை யுண்டுபண்ணும் பாகம் பரமாணுக்களின் கண்ணேயாமென்பது வைசேஷிகமதம். துவியணுக முதலிய அவயவிகளினுமா மென்பர் நையாயிகர். ஜலம் தேயு வாயுக்களினும் நித்தியத்திலுள்ள உருவமுதலியன நித்தியமும், அநித்தியத்திலுள்ளன அநித்தியமுமாம்: உருவமுதலிய நான்கும் உற்பூதம், அநுற்பூதம் என்னும் பேதத்தால் இருவகைப்படும். (உற்பூதத்தன்மை - காக்ஷியைப் பயப்பதோர் தரும விசேடம். அதனின்மை அநுற்பூதத்தன்மை.) அநுற்பூதங்கள் இரசனம் (சிங்ஙுவை), சக்ஷு, துவக்கு முதலியவற்றினும், உற்பூதங்கள் யோக்கியமான பிருதிவிமுதலியவற்றை யுண்டுபண்ணும் பரமாணு துவியணுக திரியணுக முதலியவற்றினு மிருப்பனவாம். அவை சித்திரம் அசித்திர மென்னும் பேதத்தானும் இருவகையாமென்பர் சிலர். கருமை பொன்மைமுதலியனவும், தித்திப்புக் கைப்பு முதலியனவும், நற்கந்த துர்க்கந்த முதலியனவும், மென்மை வன்மை முதலியனவுமாகிய அவயவங்களாலாக்கப்பட்ட படமுதலியவற்றிற் சித்திரங்களும் பிறவிடங்களில் அசித்திரங்களுமாம். (கஎ)

ரு. எண்ணல் வியவகாரத்தி (வழக்கி) ற்குச் சிறந்த காரணம், சங்கை. அது ஒன்றினிருப்பது, பலவற்றினிருப்பது என்னும் பேதத்தால் இருவகைப்படும். அவற்றுள், ஒருமை ஒன்றினிருப்பது. அது நித்தியப்பொருளைச் சேர்ந்தது

நித்தியமும், அநித்தியப்பொருளைச் சேர்ந்தது அநித்தியமுமாம். [இருமைமுதலியன பலவற்றினிருப்பது. அது அநேக ஒருமைகளைவிஷயஞ்செய்யும்* அபேக்ஷாபுத்தியாற்றோன்றி, அதன் நாசத்தான் நசிக்கத்தக்கதாய் அநித்தியமாகவே யிருக்கும்.] பரமாணு துவியணு ாதி'ள் அதீந்திரியமாயினும், பகவானது அபேக்ஷாபுத்தியினாற்றோன்றி, அதிர்ஷ்ட(புண்ணியபாவ) நாசத்தால் நசிக்கத் தக்கனவாம். (கஅ)

கூ. அளத்தல் வழக்கிற்கு அசாதாரண (சிறப்புக்) காரணம், பரிமாணம். அது நுண்மை, பெருமை, குறுமை, நெடுமை என நான்கு வகைத்து. அவற்றுள் நுண்மையும் குறுமையும் பரமாணு துவியணுகங்களினும். பெருமையும் நெடுமையும் திரியணுக சதுரணுக முதலியவற்றினும். அது நால்வகையினதாயினும் நித்தம் அநித்தமென இருவகைப்படும். நித்தப் பொருளிலுள்ளது நித்தம். அநித்தப் பொருளிலுள்ளது அநித்தம். அது (அநித்தபரிமாணம்) சங்கியாஜந்நியம், பரிமாணஜந்நியம், பிரசயஜந்நியம் என மூவகைத்து. அவற்றுள், துவியணுக பரிமாணம் பரமாணு விருமைச்சங்கையாற் றோன்றியதாம்; திரியணுக பரிமாணம் துவியணுக மும்மை யெண்ணா லாகியதாம். ஆண்டு அவயவத்திலுள்ள அணுபரிமாணம் (நுண்மைப்பரிமாணம்) அசமவாயியாகுமாயின், அதற்கு அணுவினும் அணுவாந்தன்மைநேரும்; அவயவ பரிமாணத்திற்குத் தனது சமானசாதியுடைய அல்லது மேன்மையையுடைய பரிமாணத்தை உண்டுபண்ணுந்

---

* அநேக ஒருமைகளை விஷயஞ் செய்யும் புத்தி அபேக்ஷாபுத்தியாம்.

தன்மையாகிய நியமமிருத்தலின். சதுரணுகமுதலிய பரிமாணம் பரிமாண ஜந்நியமாம்; அவயவத்திலுள்ளமகத்துவமே ஆண்டு அசமவாயியா யிருத்தலால். தூல (தூலம் - பஞ்சு) பிண்ட பரிமாணம் பிரசய ஜந்நியமாம். (மகத்துவ பரிமாணமுடைய) அவயவங்கட்கு (ஒன்றற் கொன்று) உண்டாகும் *சிதிலசையோகம், பிரசயம்; அதற்கே ஆண்டு அசமவாய முடைமை யிருத்தலால். (கக)

எ. வேறென்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம், வேற்றுமை. அதுவும் ஒன்றினிருப்பது பலவற்றினிருப்பது என்னும் பேதத்தால் இருவகைத்தாம். அவற்றுள் ஒரு வேற்றுமை ஒன்றினிருப்பது. அதுவும் நித்தத்திலுள்ளது நித்தமும் அநித்தத்திலுள்ளது அநித்தமுமாம். இருவேற்றுமை முதலியன பலவற்றினிருப்பது. அதுவும் பல ஏகவேற்றுமைகளை விஷயஞ் செய்யும் அபேக்ஷாபுத்தியாற் றோன்றி, யதன் நாசத்தான் நசிக்கத்தக்கதாம். (உ0)

அ. கூடியதென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம், சையோகம். அது கர்மஜம் (தொழிலாற் றோன்றியது), சையோகஜம் (கூட்டத்தாற் றோன்றியது) என இருவகைத்து. கர்மஜமும் அந்நியதரகர்மஜம் (இரண்டிலொன்றின் றொழிலாற் றோன்றுவது), உபயகர்மஜம் (இரண்டின்றொழிலாற் றோன்றுவது) என இருவகைப்படும். முன்னையது பருந்திற்கும் மலைக்குமுள்ள சையோகம்; பின்னையது ஆட்டுக்கடாக்களிர

---

* சில அவயவங்களாற் சையோக மில்லாதிருந்தும் வேறு சில அவயவங்களா லுண்டாகுஞ் சையோகம், சிதிலசையோக மெனப்படும்.

ண்டற்கும் மல்லர்களிருவருக்கு முண்டாகுஞ் சையோகம். கைக்கும்மரத்திற்கு முளதாகிய சையோகத்தாற் காயத்திற்கும் மரத்திற்குமுண்டாகுஞ் சையோகம் சையோகஜமாம்.

கூ. பிரிந்தது என்னும் வழக்கிற்குச் சிறந்த காரணம், **விபாகம்.** அது கர்மஜம், விபாகஜம் (பிரிவாற்றோன்றியது) என இரு வகைத்து. கர்மஜமும் அந்நியதரகர்மஜம், உபய கர்மஜமென இருவகைப்படும். முன்னையது பருந்திற்கு மலைக்குமுள்ளது. பின்னையது ஆட்டுக்கடாக்க ளிரண்டற்கும் மல்லர்களிருவருக்கு முண்டாவது. கைக்குமரத்திற்கு முளதாய விபாகத்தான் உண்டாகும் விபாகம், விபாகஜமாம். சங்கைமுதலியவைந்தும் சர்வதிரவியங்களினும் இருப்பனவாம்.

கO-கக. முன்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம், **பரத்துவம்**; பின்னென்னும் வழக்கிற்குச் சிறந்தகாரணம், **அபரத்துவம்.** அவை திக்காலாயின, காலத்தாலாயின என இருவகைப்படும். எது எதன் அபேக்ஷையான் (நோக்கான்) மூத்ததோ, ஆங்கே அவ்வெல்லையினை யுடைய பரத்துவம் காலத்தாலாகியதாம், எது எதன் அபேக்ஷையான் இளையதோ, ஆங்கே அவ்வவதியினையுடைய அபரத்துவம் காலத்தாலாகியதாம். ஈண்டுக் காலத்திற்கும் பிண்டத்திற்கு முளதாய் சையோகம், அசமவாயி. மூப்பிளமைகளின் ஞானம், நிமித்தம். அதன் நாசம் அதன் (பரத்துவாபரத்துவங்களின்) நாசத்திற்கு நிமித்தம். இவை அநித்திய திரவியத்திலுள்ளனவேயாம். எது எதன்அபேக்ஷயாற் றூரத்ததோ, ஆங்கே அவ்வெல்லையினை யுடைய பரத்துவம் திக்கினா லாகியதாம்;

எது எதன் அபேக்ஷையாற் சமீபித்ததோ, ஆங்கே அவ்வெல்லையினையுடைய அபரத்துவம் திக்கினு லாகியதாம். ஈண்டுத் திக்கிற்கும் பிண்டத்திற்கு முளதாய சையோகம், அசமவாயி. சேய்மை அண்மைகளின் ஞானம், நிமித்தம். அதன் நாசம் அதன் (பரத்துவா பரத்துவங்களின்) நாச நிமித்தம். இவை மூர்த்தத் திரவியத்திலுள்ளனவேயாம். (உந)

கஉ. புத்தித்தன்மைப் பொது வியல்புடையதாதல், பொருள் விளக்கமாதல் புத்தி. அது ஸ்மிருதியும் (நினைவும்), அநுபவமுமென இருவகைத்து. வாசனை மாத்திரத்தாற்றோன்றும்ஞானம், நினைவு. அது, அந்தவிசுவேசுவரன், அந்தமணிகர்ணிகை என்றற்றொடக்கத்தன போலவாம். ஆண்டுப் பூர்வ (முன்) அநுபவம், கரணம்; சம்ஸ்காரம் வியாபாரம். அவனே இத்தேவதத்தன் என்னும் * பிரத்தியபிஞ்ஞையில் அதிவியாப்தியுமில்லை; ஆண்டுச் சம்ஸ்காரத்தாற் றோன்றிய அஃதென்னுந் தன்மையாகிய நினைவே ஏது; சம்ஸ்காரம் ஏதுவன்றென அதிவியாப்தி நீங்குதலான். நினைவின் வேறாய ஞானமாதல், அநுபவத்தன்மைச்சாதி யுடையதாதல் அநுபவம். அது பிரமை (உண்மையனுபவம்), அப்பிரமை (இன்மையநுபவம்) என இருவகைத்து.

பிரமாணப்போலியாற்றோன்றும் அயதார்த்த(இன்மை) அநுபவம், அப்பிரமை. அதுவும் பிரமம் (மயக்கம்) சமுசய

* பிரத்தியக்ஷஞானத்தின் சாமக்கிரியையோடு கூடிய சம்ஸ்கார ஜந்நியஞானம் பிரத்தியபிஞ்ஞாபிரத்தியக்ஷமெனப்படும். (சாமக்கிரியை - சாதனம்.)

மென்னும் வேறுபாட்டால் * இருவகைத்து. விபரீத நிச்ச யம் பிரமம். அது "பொன்னிறத்தது சங்கு, செந்நிறத்தது படிகம்" என்பதாம். ஒருதருமியில் மாறுபட்ட பல கோடி (பக்ஷங்) களை யுடைய ஞானம், சமுசயம். அது 'தூரத்தி லிருப்பதாய் உயரமாயுள்ள இது தாணுவா? புருடனா?' என் பதாம். யதார்த்த (உண்மை) அநுபவம், பிரமை. பயனுள்ள பிரவிருத்தியைப் பிறப்பித்தலிற்றகுதியுடைமை, யதார்த்தத் தன்மையாம். ஸ்மிருதி அநுபவ சாதாரணமாய பிரமைக் கரணம், பிரமாணம். (உச)

காரணம்.

வியாபாரமுடைய காரணம், கரணம். அது வெட்டுந்தொ ழிற்குக் கோடரி கரணமாதல் போலவாம். அதனாற் (கரண த்தாற்) றோன்றப்படுந் தன்மையதாய், அதனாற் (கரணத்தா ற்) றோன்றற்பாலதாய வொன்றனைத் தோற்றுவிப்பது, வியா பாரம். அது கோடரிக்கும் மரத்திற்கு முள்ள சையோகம் போலவாம். பிறிதோராற்றாற் பெறப்படாததாய் நியதமாய் இன்றியமையாது) காரியத்திற்கு முன்னிற்பது, காரணம். அது படத்திற்கு நூன்முதலியனவும் குடத்திற்குக் கபால முதலியனவும் போலவாம். பிறிதோராற்றாற் பெறப்படுத லின்மை பிறிதோராற்றாற் பெறப்படாமையாம். பிறிதோ

---

*இன்மையனுபவம் சமுசயம், விபரீதம் (பிரமம்), தருக்கம் என மூவகைப்படுமென்பர் பிறர். ஈண்டுத் தருக்கம், விபரீதத்துட்படுமெ ன்னுங் கருத்தான் இருவகையாகக் கூறினார். நால்வகைத் தாமென்பு ழியும் இவ்வாறே கொள்க.

ராற்றாற் பெறப்படுதல் * மூவகைத்து. முதலாவது எதனோடு கூடிய எதனைக்குறித்து எது முன்னிற்பதென்று உணரப்படுகின்றதோ, அது அதனைக்குறித்து அதனோடே பிறிதோராற்றாற் பெறப்படுவதென்பதாம். அஃது, குடத்தைக் குறித்துத் தண்டத்தோடு கூடிய தண்ட உருவமும் தண்டத் தன்மையும் முன்னிற்பதென்றுதல், தண்டத்தோடு கூடவே தண்ட வுருவமும் தண்டத்தன்மையும் கடத்தைக் குறித்து முன்னிற்பதென்றுதல் கிரகிக்கப்படுதலால் என்பதாம்.

இரண்டாவது. பிறிதொன்றனைக்குறித்து முன்னிற்றலுணர்ந்தன்றி, எடுத்துக் கொண்டதனைக் குறித்து முன்னிற்றலுணரப்படுவது யாது, அது அவ்வெடுத்துக்கொண்டதனைக் குறித்துப் பிறிதோராற்றாற் பெறப்படுவதென்பதாம். குடத்தைக் குறித்து ஆகாயமும் குலாலனது பிதாவும் பிறிதோராற்றாற் பெறப்படுவனவாம். ஆகாயம் ஆகாயத்தன்மையான் குடத்தைக் குறித்து முன்னிற்பதாகக் கொள்ளப்படுகின்றது. ஆகாயத்தன்மையும் சத்த சமவாயிகாரணத் தன்மையாம். அதுவும் சத்தத்திற்கு நியதமாய் முன்னிற்குந் தன்மையால் நிகழ்வதாம். அங்ஙனமே சத்தத்தைக் குறித்து முன்னிற்றலுணர்ந்தன்றிக் கடத்தைக் குறித்து முன்னிற்றலுணரப்படுதலால், ஆகாயம் குடத்தைக் குறித்து முன்

* அந்நியதாசித்தி பிற நூல்களில் ஐவகையாகக் கூறப்படுமாயினும், ஈண்டுச் சிந்தாமணிகாரர் மதம்பற்றி மூன்றாய் வகுக்கப்பட்டது.

னிற்ற லுணரப்படுகின்றது. இவ்வாறே குலாலபிதாவுக்கும் குலாலபிதாவெனுந்தன்மையான் குடத்தைக் குறித்து முன்னிற்குந் தன்மை கொள்ளப்படும். குலாலபிதா வென்னுந் தன்மையாவது குலாலனைப்பெறும் ஆண்மையாம். அதுவும் குலாலனுக்கு நியதமாய் முன்னிற்றலால் நிகழ்வதாம். ஆங்ஙனமே குலாலனைக்குறித்து முன்னிற்றலுணர்ந்துழி, கடத்தைக் குறித்து முன்னிற்றல் கிரகிக்கப்படுதலால், கடத்தைக் குறித்துக் குலாலபிதா பிறிதோராற்றாற் பெறப்படுவதாம்.

மூன்றவது. பிறவிடங்களிலே நியதமாய் முன்னிற்பது இது வென்று துணியப்பட்டதனாற்றானே காரியந் தோன்றுழி, அதனோ டுடன்நிகழ்வது பிறிதோராற்றாற் பெறப்படுவது என்பதாம். கடவிசேஷத்தைக் குறித்துத் தெய்வீகமாய் வந்த கழுதை பிறிதோராற்றாற் பெறப்படுவதாதல்போல. அதாவது கட விசேஷத்தின் வேறிடமாகிய பிறிதோர் கடத்தில் நியதமாய் முன்னிற்பது இது வென்று துணியப்பட்ட தண்டசக்கரமுதலியவற்றாற்றானே கட விசேஷந்தோன்றுங் காலத்தும், தண்ட சக்கராதிகளோடு உடன் நிகழ்வதான தெய்வீகமாய் வந்த கழுதை பிறிதோராற்றாற் பெறப்படுவதாம். கழுதைச் சாமானியம் கடசாமானியத்தைக் குறித்து ஏதுவாதலை நீக்குதற்கு நியதமாய்முன்னிற்பதென்று ஈண்டு நியதம் என்னும் பதங் கூறப்பட்டது; ஆங்கே முற்கூறிய வண்ணமான அந்நியதாசித்தி (பிறிதோராற்றாற் பெறப்படுதல்) இன்மையான். (சாமானியம்-ஜாதி.) கடசாமானியத்திற்கு அந்நியமான பட முதலியவற்றில் நியதமாய் முன்னிற்பது

இதுவென்று துணியப்பட்ட தந்து வேமா முதலியவற்றுங் கடசாமானியத்தின் சம்பவமில்லை; முற்கூறிய வண்ணமான அந்நியதாசித்தியிருத்தலால். நியதமாய் முன்னிற்றலும் அவ்வியவகித பூர்வகாலாவச்சேதத்தாற் (மறைப்பின்றிய முற்காலவரைவான்) காரிய தேசத்திருத்தலாம். இது கழுதைச் சமானியத் தில்லையாதலால் அவ்வியாப்தி யில்லை. இஃது சுருங்கக் கூறியதாம். (உரு)

அக்காரணம் சமவாயி, அசமவாயி, நிமித்தம் என்னும் பேதத்தால் மூவகைத்தாம். அவற்றுள் (க) எதைச் சமவேதித்து (ஒற்றித்து)க் காரியம் உற்பத்தியாகின்றதோ, அது சமவாயிகாரணம். அது படத்திற்குத் தந்துக்களும், கடத்திற்குக் கபாலங்(ஓடு)களும், தம்மிலுள்ள உருவமுதலியவற்றிற்குப் படம் குட முதலியனவும் சமவாயிகாரணமாதல் போலவாம். (உ) சமயவாயிகாரணத்தை யடுத்த காரணம் அசமவாயிகாரணம். படத்திற்குத் தந்துசையோகம் அசமவாயிகாரணமாம். அது, பட சமவாயிகாரணமாகிய தந்துக்களை யடுத்ததாயும் காரணமாயு மிருத்தலாலென்க. (ங) சமவாயி அசமவாயி காரணத் தன்மைகளுக்கு வேறாகிய காரணத் தன்மையை யுடையது நிமித்தகாரணம். அது படத்திற்குத் துரி (நாடா) வேமா (தறி) முதலியனவும், கடத்திற்குத் தண்ட சக்கர முதலியனவும் நிமித்தகாரணமாதல் போல. (உசா)

## பிரத்தியக்ஷப்பிரமாணம்.

அந்தப் பிரமாணம் பிரத்தியக்ஷ அநுமான பேதத்தால் இருவகைப்படும். * சத்தமுதலியனவும் அநுமான விதியினு

* சத்தமும் உவமானமும் அநுமானத்துளடங்குமென்பது கருத்து.

லேயே பிராமாணியமா மென்பது வைசேஷிக மதம். நால் வகைத் தென்பார் நையாயிகர். அஃது (நியாய) சூத்திர கர்த்தாவால் 'பிரத்தியக்ஷம், அநுமானம், உவமானம், சத்தம் என்பவைபிரமாணங்கள்' என்றுசொல்லப்பட்டிருக்கின்றது. பிரத்தியக்ஷப் பிரமைக்கு (புலப்பாடக்காணும் காட்சியறிவிற்கு)க் காரணம் பிரத்தியக்ஷம் (காண்டல்). அதுவும் இந்திரியவடிவினதாம். இந்திரியவிஷய சம்பந்தத்தாற் றோன்றும் ஞானம் பிரத்தியக்ஷம். அது சவிகற்பம் நிருவிகற்பம் என்னும் பேதத்தால் இருவகைத்து. விசேஷண விசேஷியங்களின் சம்பந்தத்தைக் கவரும் பிரத்தியக்ஷம் சவிகற்பகம். அது 'இது குடம்' என்றற்றொடக்கத்ததாம். விசேஷண விசேஷியங்களின் சம்பந்தத்தைக் கவராத பிரத்தியக்ஷம் நிருவிகற்பம். அதுவும் குடத்தன்மையென்னும் வடிவினதாகிய அதீந்திரியமாம். ஈண்டுப் பிரமாண மின்றென்பதில்லை. அஃது இல்லையாயின், சுழுத்தியினின்று மெழுந்தவனுக்கு இது குடமென்னும் விசிஷ்ட (அடையடுத்த) ஞானமுண்டாகாது; விசேஷண வடிவமான குடத்தன்மையின் அறிவின்மையான்; விசேஷணஞானமின்றி விசிஷ்டஞானந் தோன்றாமையால், அதற்கு அது ஏதுவாயிருத்தலின்.

மீண்டும் பிரத்தியக்ஷம் இலௌகிகம் அலௌகிகம்என்னும் பேதத்தால் இருவகைப்படும். அவற்றுள் இலௌகிகப் பிரத்தியக்ஷத்திற்கு ஏதுவான சம்பந்தமானது சையோகம், சையுக்தசமவாயம், சையுக்தசமவேதசமவாயம், சமவாயம், சமவேத சமவாயம், விசேஷண விசேஷியத்தன்மை என

ஆறுவகைப்படும். அவற்றுள், (க) திரவியத்தைக் கவர்தல் சையோகத்தாலும்; 'ஈண்டுக் குடமிருக்கிற' தென நேத்திர முதலியவற்றிற்குக் குடமுதலியவற்றோடு சையோகமிருத்தலின். இவ்வாறு மனதின் சையோகத்தால் 'நானிருக்கிறேன்' என ஆன்மா கிரகிக்கப்படுகின்றது. (உ) 'ஈண்டுக் குடத்தில் உருவம், அசைவு, திரவியத்தன்மை முதலிய விருக்கின்றன வென்று குணம், கர்மம், திரவியத்துள்ள சாதி யென்பவை சையுத்த சமவாயத்தாற் கிரகிக்கப்படுகின்றன; நேத்திர முதலியவற்றோடு சையுத்தமான குடத்தில் உருவ முதலியவற்றிற்குச் சமவாய மிருத்தலின். (ங) 'குடத்திலுள்ள உருவத்தில் உருவத்தன்மைமுதலியனவிருக்கின்றன' 'குடத்திலுள்ள சலனத்தில் (அசைவில்) கர்மத்தன்மை முதலியன விருக்கின்றன'என்று குண கர்ம சாதிகள், சையுக்தசமவேத சமவாயத்தாற் கிரகிக்கப்படுகின்றன. நேத்திர முதலியவற்றோடு சையுத்தமான குடத்தில் சமவேதமா யிருப்பவை உருவ முதலியனவும், சலனமுமாம்; ஆண்டு உருவத்தன்மை முதலியவற்றிற்கும் கர்மத்தன்மை முதலியவற்றிற்கும் சமவாயமிருத்தலின். (ச) 'ஈண்டு வீணைச்சத்தமிருக்கின்று' தெனச் சமவாயத்தாற் சத்தம் கிரகிக்கப்படுகின்றது; செவித்துளையின் வளைபட்ட ஆகாயம் சுரோத்திரம்; அதன்கண் சத்தத்திற்குச் சமவாயமிருத்தலின். (ரு) ஈண்டுச் சத்தத்தில் சத்தத் தன்மை குணத்தன்மை முதலியன சமவேத சமயவாயத்தாற் கிரகிக்கப்படுகின்றன; சுரோத்திர சமவேதமாகிய சத்தத்திற் சத்தத்தன்மை முதலியவற்றிற்குச் சமவாயமிருத்தலான். (சா) விசேஷணத்தன்மையால் சமவாய

மும் அபாவமும் கிரகிக்கப்படுகின்றன. அஃதெங்ஙனமெனின், விசேஷணத் தன்மையானது இந்திரிய விசேஷணத் தன்மை இந்திரிய சம்பந்தமுடைய விசேஷணத் தன்மை என இருவகைப்படும்.

ஆண்டு இந்திரிய விசேஷணத்தன்மையான் சத்த சமவாயமும் சத்தாபாவமும் கிரகிக்கப்படுகின்றன; 'ஈண்டுச் சத்தசமவாயமுளது' 'ஈண்டுச்சத்தமின்'றெனச் சுரோத்திரேந்திரியத்தில் சத்தசமவாயமும் சத்தாபாவமும் விசேஷணமாயிருத்தலின். இந்திரிய சம்பந்தமுடைய விசேஷணத்தன்மையால் குட முதலியவற்றின் சமவாயமும் குடத்தினின்மையும் கிரகிக்கப்படுகின்றன; 'இக்கபாலத்தில் குட சமவாயமுளது' 'இப்பூதலத்தில் குடமின்'றெனக் கண்முதலியவற்றோடு கூடிய கபாலத்தில் குட சமவாயமும் பூதலத்திற் குடமின்மையும் விசேஷணமாதலின். சமவாயத்திற்குப் பிரத்தியக்ஷங் கூறுதல் நியாயமதத்தாலும். வைசேஷிகமதத்திலோ சமவாயம் அதீந்திரியமாம். (௨௭)

## அலௌகிகப்பிரத்தியக்ஷம்.

௨. அலௌகிகப் பிரத்தியக்ஷத்தில் ஏதுவாகும் சந்நிகருஷம் (சம்பந்தம்) சாமானிய லக்ஷணம், ஞான லக்ஷணம், யோகஜ தர்மம் என மூவகைத்து. இம்மூவகைச் சம்பந்தமும் ஆறிந்திரியங்களுக்கும் சககாரியா (உபகரணமா)மென்று சம்பிரதாய முணர்ந்தவர் கூறுவர். மனதிற்கே சககாரியாமென்பர் சூலபாணிமிசிரர். அவற்றுள், க. அறியப்படும் * சுவாசிரயங் (தமதுசார்பு) களின் சம்பந்தம் சாமா

ணியம். அறியப்படும் கடத்தன்மைச் சம்பந்தத்தாற் கடங்களென்னும் வடிவினதாய சகல கடங்களின் பிரத்தியக்ஷமும் (மனதினுல்) உண்டாகின்றது. உ. ஞானலக்ஷண சம்பந்தத்தால் அதன் விஷய வடிவினதாகிய அவ்வப்பதார்த்தங்களின் பிரத்தியக்ஷம் (மனதினுல்) உண்டாகின்றது. அங்ஙனமின்றேல் கவி காவியங்களுக்கு மூல பூதமாகிய அவ்வப்பதார்த்தங்களின் சம்பந்தஞான மெங்ஙனங்கூடும்? இவ்வாறு சந்தனம் வாசனையுடைத்து என்று கண்ணுற் பார்க்குமிடத்து, வாசனையின் விளக்கமும் ஞானசந்நிகருஷத்தால் உண்டாகின்றது; வாசனை கண்ணிற்கு அயோக்கியமாதலான்; சக்ஷுஸம்யுக்தமான சந்தன சமவாயம் ஆண்டிருக்கினும் அப்பிரயோஜகமாதலான். ௩. யோகஜ தர்ம சம்பந்தத்தால் யோகிகளுக்கு வஸ்துமாத்திரத்தின் பிரத்தியக்ஷம் (மனதினுல்) உண்டாகின்றது. (உ௮)

அந்தப் பிரத்தியக்ஷமும் கிராணம், இரசனம், சக்ஷு, துவக்கு, சுரோத்திரம், மனது என்னும் பேதத்தால் அறுவகைப்படும். க. கந்தப் பிரத்தியக்ஷத்திற்கு அசாதாரணகாரணம் கிராணம். உ. இரசப் பிரத்தியக்ஷ அசாதாரண காரணம் இரசனம். ௩. உருவப் பிரத்தியக்ஷ அசாதாரண காரணம் சக்ஷு. ௪. பரிசப் பிரத்தியக்ஷ அசாதாரண காரணம் துவக்கு ௫. சத்தப்பிரத்தியக்ஷ அசாதாரண காரணம் சுரோத்திரம். ௬. சுகாதிப்பிரத்தியக்ஷ அசாதாரணகாரணம் மனம். கிராண முதலியவற்றிலுள்ள அசாதாரணமென்னுஞ் சொல் ஆன்மா முதலியவற்றை நீக்குதற்பொருட்டாம். கந்த முதலியவற்றின் பிரத்தியக்ஷமும் க. சந்தனத்தில் வாசனையி

ருக்கின்றது, உ. வெல்லத்தில் தித்திப்பிரசமிருக்கிறது ந. கடத்தில் இரத்தவர்ணமிருக்கின்றது, ச. ஜலத்தில் குளிர்ந்த பரிச மிருக்கின்றது ரு. வனத்தில் சிங்க நாத மிருக்கின்றது, சா. என்னிடத்துச் சுகமிருக்கின்றது என்னும் இவை முதலிய வழிவினைதாம். அவற்றுள் கரண வடிவமாகிய கிராண முதலியவற்றின் வியாபாரம கிராண முதலியவற்றிற்கும் மனதிற்கு முள்ள சையோகமாம. மனதின் வியாபாரம் ஆன்ம சையோக (ஆன்மாவிற்கும் மனதிற்குமுள்ள சையோக) மாம். கிராண முதலியவற்றிற்குக் கந்த முதலிய வற்றின் பிரத்தியக்ஷத்தை யுண்டுபண்ணுந் தன்மையுளதேல், பரமாணு மணியாதிகளிலுள்ள கந்தமுதலியவற்றின் பிரத்தியக்ஷமு முண்டாதல் வேண்டுமெனின், அற்றன்று; மகத்துவத்தோடு ஒருங்கு நிற்கும் உற்பூதமான கந்தமுதலியனவே கிராண முதலியவற்றிற் குரியனவாகலின். பரமாணுவிலுள்ள கந்தமுதலியன மகத்துவத்தோடு ஒருங்கு நிற்பன வாகா; மணியாதிகளிலுள்ள கந்தமுதலியன உற்பூதமாகா. ஆதலின், அவை பிரத்தியக்ஷமன்று. இவ்வாறு பேரிமுதலியவிடங்களிற் றோன்றுஞ் சத்தத்தினின்றும் * வீசிதரங்க நியாயத்தாலுதல், கதம்ப கோளக நியாயத்தாலுதல் சுரோத்திர தேசத்தி லுண்டாகுஞ் சத்தம் சுரோத்திரத்திற் குரியதாம்; அதற்கே சுரோத்திர சம்பந்தங் கூடுமாகலின். அவற்றுள் கிராணம், இரசனம், சுரோத்திரமென்பவை திரவியத்தைக் கவர்வன வாகா. சக்ஷு, துவக்கு, மன மென்பவை திரவியத்தைக் கிரகிப்பனவாம். மகத்துவ உற்பூத உருவ

* இந்நியாயத்தைச் சத்தநிரூபணத்தில் காண்க.

முடைய திரவியம் சக்ஷுவிற்குரியதாம். இவ்வாறு மகத்துவ உற்பூத உருவத்தையும் பரிசத்தையும் உடைய திரவியம் துவக்கிற் குரியதாம். இதனுற்றான் பரமாணு, வாயு, பைசாச முதலியன சக்ஷுவானும் துவக்கானும் கிரகிக்கப்படுவ தில்லை; பரமாணுவில் மகத்துவ மின்மையான், வாயுவில் உருவமின்மையான், பைசாசமுதலியவற்றில் உற்பூத உருவ மின்மையான் என்க. இதனுனே பிரபையும் துவக்கினுல் கிரகிக்கப்படுகிற தில்லை; ஆண்டு உற்பூத பரிச மின்மை யான். இவ்வாற்றான் யோக்கிய திரவியத்தைச் சமவேதித் துள்ளனவாகிய திரவியத்துவ முதலிய சாமானியம், கர்மம், சங்கை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், வியாகம், பரத்துவம், அபரத்துவம், திரவத்துவம், சிநேகம், வேகம் என்பனவும், அவற்றின் சமவாயமும், அவற்றின் அபாவங்களும் சக்ஷுவிற்கும் துவக்கிற்கு முரியனவாம். ஜீவான்மலக்ஷணத் திரவியம் மனதிற்குரியதாம். அதை (ஜீவான்ம திரவியத்தை)ச் சமவேதித்துள்ளனவாகிய ஆன்மத்துவாதி சாமானியம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தின மென்பவைகளும், அவற்றின் சமவாயமும், அவற்றி னபாவமும் மனே யோக்கியங்களாம் (மனத்திற் குரியனவாம்); எவ்விந்திரியத்தான் எது கவரப்படுகின்றதோ, அவ்விந்திரியத்தான் அதன்கணுள்ள சாமானியமும், அதன் சமவாயமும், அதனபாவமும் கிரகிக்கப்படுமென்னும் நியமமிருத்தலின். இவ்வாறு பிரத்தியக்ஷம் விவரிக்கப்பட்டது.

பிரத்தியக்ஷநிரூபணம் முடிந்தது.

# அநுமானம்.

அநுமிதி கரணம் அநுமானம். அதுவுந் தூமம் வன்னி வியாப்பியமாமென்னும் வியாத்தி ஞானமாம். வன்னி வியாப்பிய தூமமுடையது இதுவென்னும் மூன்றாவ திலிங்க பராமரிசம் (குறியாராய்ச்சி) வியாபாரமாம். இதை மூன்றாவதெனல் எங்ஙனமெனின், கூறப்படுகின்றது:—அடுக்களை முதலிய திருஷ்டாந்தத்தில் வன்னிக்குந் தூமத்திற்கும் பெரும்பாலும் உடனிகழ்ச்சி காண்டலால் வியாப்பியத்தன்மையா லுண்டாம தூமஞானம் முதலாவது. அதன்பின் பருவதமுதலியவற்றிற் றூமத்தைக் கண்டு, வியாப்பியத் தன்மையான் அதை நினைத்தல் இரண்டாவது. அதன்பின் ஆண்டே வியாப்பியத்தன்மையான் தூமத்தின் பராமரிசம் 'வன்னிவியாப்பிய தூமமுடையது இது' என்னும் வடிவினதாயுண்டாகின்றது. இவ்வாற்றான் அது மூன்றாவதாமெனல் அறிவிக்கப்பட்டது. இலிங்கஞானத்தாற் றோன்றும் * இலிங்கி ஞானம **அநுமிதி.** அஃது, பர்வதமுதலியவற்றிற் புகையின் ஞானம் நிகழ்ந்தபின்னர்ப், பர்வதம் வன்னியுடைத்தென்னும் ஞானமுண்டாதல் போலுமென்க. வியாத்தியடுத்த பக்ஷ தருமத் தன்மையுடையது இலிங்கம். அற்றேல் இவ்வியாத்தி யென்பது யாதெனிற் கூறப்படுகின்றது. வியபிசாரமின்றிய சாத்திய சாமாநாதிகரணியம் வியாப்தி. இஃது (வியாப்தி) 'பர்வதம் வன்னியுடைத்து புகையுடைமையான்' என்றற்றொட

* ஆராய்ச்சியாற்றோன்றும் இம்மலை தீயுடைத்தென்னுமுணர்வு.

க்கத்துச் சத்தேது (உண்மையேது)வி லுள்ளதாம். 'யாண்டு யாண்டுப் புகை ஆண்டாண்டு வன்னி' என்னும் நியம மிருத்தலின். இஃது, 'மலை புகையுடைத்து வன்னி யுடைமையான்' என்றற்றொடக்கத்து அசத்தேது (இன்மையேது) விலின்று. 'யாண்டு யாண்டுத் தீ ஆண்டாண்டுத் தூமம்' என்னும் நியமமின்மையான். ஒருகக் காய்ச்சிய இரும்பில் வன்னி யிருந்துந் தூமமின்மையின், வியபிசார ஞானமின்மையோடுகூடிய (பிறழ்ச்சி யுணர்வின்மையோடுகூடிய) ஏது சாத்தியங்களின் உடனிகழ்ச்சி யுணர்வு வியாத்தியைத் தெரிவிப்பதாம். அஃது எங்ஙனமெனின், இங்ஙனமாம்:—ஏதுவானது சாத்தியாபாவமுடையதன்கண்ணிருத்தல் வியபிசாரம். அதனுணர்ச்சியுளதாயவழி வியாத்தி கிரகிக்கப்படாமையின், அதன் (வியபிசாரத்தின்) அபாவம் ஆண்டுக் காரணமாம். ஏது சாத்தியங்களி னுடனிகழ்ச்சி யுணர்வு அந்நுவயவெதிரேகங்களால் (உடன்பாட்டானும் எதிர்மறையானும்) ஆண்டுக் காரணமாம். பக்ஷதர்மத்தன்மை யாதெனின், பக்ஷத்தை ஆசிரயித் (சார்ந்)திருக்குந் தன்மை பக்ஷதர்மத் தன்மையாம். பக்ஷத் தன்மையும் துணிதல் வேட்கை யின்மையோடுகூடிய துணி பொருட் பெறுதி யின்மையாம். இஃது பர்வதமுதலிய பக்ஷத்திலுளதாம்; துணிதல் வேட்கை யின்மையோடுகூடிய சாத்திய நிச்சயம் (துணிபொருட்பெறுதி) ஆண்டின்மையான்; பர்வத முதலியவற்றில் துணி பொருட்பெறுதி இருக்கினும், துணிதல் வேட்கையுளதாய வழியே, 'மலை தீயுடைத்து, புகை யுடைமையான்' என்னும் அநுமானம் சம்பவித்தலான். ஆண்டுப் பக்ஷத்தன்மையை அடை

தற்பொருட்டு, துணிதல் வேட்கையில்லாமையோடு கூடிய தன்மை சாத்திய நிச்சய விசேஷணமாம். அங்ஙனமே துணிதல் வேட்கை யில்லாமையோடு கூடிய சாத்திய நிச்சயம் ஆண்டின்மையான் பக்ஷத்தன்மையாம். (௫௰)

அவ்வநுமானம் கேவலாந்நுவயி, கேவல வெதிரேகி, அந்வய வெதிரேகி என மூவகைத்து. க. யாண்டு அந்நுவய வியாத்தி மாத்திர முளதோ, அது கேவலாந்நுவயி. அது குடம் அபிதேயம், பிரமேயத் தன்மையா னென்பதாம். ஈண்டுக் குடம் பக்ஷம்; அதன் அபிதேயத் தன்மை சாத்தியம்; பிரமேயத்தன்மை ஏது; ஆங்கு, யாண்டு யாண்டுப் பிரமேயத்துவம், ஆண்டாண்டு அபிதேயத்துவம்; படம்போல என்னும் அந்நுவய வியாத்தி மாத்திர முளது. யாண்டு யாண்டுச் சாத்தியமில்லை, ஆண்டாண்டு ஏதுவில்லை என்னும் வெதிரேக வியாப்தி யில்லை; அபிதேயமும் பிரமேயத்தன்மையு மெங்கு மிருத்தலால்; சாத்தியாபாவ முதலியன அப்பிரசித்தமாயிருத்தலின். உ. யாண்டு வெதிரேக வியாப்திமாத்திரமுளதோ, அது கேவலவெதிரேகி. அது 'உயிர்த்திருக்குமுடல் ஆன்மாவோடு கூடியதாம்; பிராணன் முதலியவற்றை யுடைமையான்' என்றற்றொடக்கத்தனபோல்வாம். இங்கு உயிர்த்திருக்கு முடல் பக்ஷம்; அதன் ஆன்மாவோடு கூடியதன்மை சாத்தியம்; பிராணன் முதலியவற்றை யுடைமை ஏது; அதில் 'யாண்டுயாண்டு ஆன்மாவோடுகூடிய தன்மையில்லையோ, ஆண்டாண்டுப் பிராணன் முதலியவற்றையுடைமையில்லை, குடமுதலியவற்றிற்போல' என்னும்

வெதிரேக வியாத்திமாத்திர முளது. 'யாண்டு யாண்டுப் பிராணாதிக மதுடைமையோ, ஆண்டாண்டு ஆன்மாவோடுகூடிய தன்மையா' மென்னும் அந்நுவய வியாத்தியில்லை; திருஷ்டாந்தமின்மையானும் உயிர்த்தேகத்துக்கு முடல்மாத்திரம் பக்ஷமாதலானும், வேறிடத்தில் ஏது சாத்தியமென்னு மிரண்டுமேயின்மையானு மென்க. ௩. யாண்டு அந்நுவயவியாத்தியும் வெதிரேக வியாத்தியும் சொல்லப்படுகின்றதோ, அது அந்நுவய வெதிரேகி. அது 'பர்வதம் வன்னியுடைத்து, புகையுடைமையான்' என்றற் றொடக்கத்தனபோலவாம். ஈண்டுப் பர்வதம் பக்ஷம்; அதன் வன்னியுடைமை சாத்தியம்; புகை யுடைமையா னென்பது ஏது. இதில் 'யாண்டு யாண்டுத் தூமம், ஆண்டாண்டுத் தீ, அடுக்களை முதலியவற்றிற்போல' வென்னும் அந்நுவய வியாத்தியும், இவ்வாறே 'யாண்டு யாண்டு வன்னி யபாவமோ, ஆண்டாண்டுப் புகையின் அபாவமாம்; மடு முதலிய வற்றிற்போல' வென்னும் வெதிரேகவியாத்தியு மிருக்கின்றன. அந்நுவயத்தில் சாதனம் வியாப்பியமும், சாத்தியம் வியாபகமுமாக அங்கீகரிக்கப்படுகின்றது. வேறிட (வெதிரேக) த்திற் சாத்தியாபாவம் வியாப்பியமும் சாதனத்தி னழிவு வியாபகமுமாம். வியாப்பியத்தின் வசன முன்னும், வியாபகத்தின் வசனம் அதன் பின்னுமாம். இவ்வாறு பரீக்ஷிக்கப்படும் வியாத்தி யுண்மையாக விளக்கமாகின்றது. இம்மூன்றனுள் அந்வய வெதிரேகியானது ஐந்துருவங்களை யடைந்தே தனது சாத்தியத்தைச் சாதிக்கின்றது. அவ்வைந்துருக்களாவன:—பக்ஷதருமத்துவம், சபக்கத்திருத்தல், விபக்கத்தின்மை, அபாதிதவிஷயத்துவம், அசற்பிரதிபக்ஷத்து

வம் என்பன. க. பக்கமாகிய ஆசிரயத்திருத்தல் பக்ஷதருமத்து வம். உ. நிச்சயிக்கப்பட்ட சாத்தியம் (துணிபொருள்) உடையது சபக்ஷம். ஆண்டிருத்தல் சபக்ஷத்திருத்தலாம். ௩. நிச்சயிக்கப்பட்ட சாத்தியபாவமுடையது விபக்ஷம். ஆண்டில்லாதிருத்தல் விபக்ஷத்தின்மை. மற்றோர் பிரமாணத்தாலளக்கப்படாத சாத்தியாபாவமுடைமை அபாதிதவிஷயத்துவம் (மறுதலைக்குவிடயமாகாமை). ருை. சாத்தியாபாவத்தைச் சாதிக்கு மற்றோ ரேதுவின்மை அசத்பிரதிபக்ஷத்தன்மை. இவ்வைந்து வடிவங்களும் வன்னியைச் சாதிக்குந் தூமமுதலிய அந்வயவெதிரேகங்களி லுள்ளனவாம். கேவலாந்நுவயியில் விபக்ஷத்தின்மை யில்லை; விபக்ஷம் பிரசித்தமாகாமையின். கேவலவெரேகத்தில் சபக்கத்திருத்த லில்லை; சபக்கஞ் சித்தியாமையான். (௩௧)

மூவகை யநுமானமும் தன் பொருட்டுப் பிறர்பொருட்டென இருவகைத்தாம். க. தனது அநுமதிக்கே ஏதுவாவது சுவார்த்தாநுமானம் (தன் பொருட்டநுமானம்). உ. தானே புகையால் அக்கினியை யநுமித்து, அந்நியருக் கறிவித்தற்பொருட்டு ஐந்தவயவங்களோடுகூடிய அநுமானவாக்கியத்தைப் பிரயோகித்தல் பரார்த்தாநுமானம் (பிறர் பொருட்டநுமானம்). ஐந்தவயவங்களாவன:—பிரதிஞ்ஞை, ஏது. உதாகரணம், உபநயம், நிகமனமென்பனவாம். அவற்றுள், க. பக்ஷத்திற் சாத்தியத்தை நிச்சயித்தல் பிரதிஞ்ஞை. அது 'பர்வதம் வன்னியுடைத்து' என்பதாம். உ. இன், ஆன் உருபீறாக ஏதுவை எடுத்துக் காட்டும் வாக்கியம் ஏது. அது 'புகையுடைமையான்' என்பதாம். ௩. வியாத்தியைப் பிரதி

பாதிக்கும் வசனம் உதாகரணம். அது 'யாது யாது புகையுடைத்து அது அது வன்னியுடைத்து, அடுக்களைபோல' என்பதாம். ௪. வியாத்தி விசிஷ்டமாகிய ஏதுவின் பக்ஷ தருமத் தன்மையை யெடுத்துக் காட்டும் வாக்கியம் உபநயம். அது 'வன்னி வியாப்பிய தூமமுடைத் திது' என்பதாம். ௫. பாதிதத்துவமும் சற்பிரதிபக்ஷத்துவமு மின்றிய தாற்பரியமுடைய வாக்கியம் நிகமனம். அது 'ஆதலால் வன்னியுடைத்து' என்பதாம். இதுவும் அங்ஙனம் என்பது உபநயத்திற்கும், ஆதலால் இங்ஙனமென்பது நிகமனத்திற்கும் உடலாமென்பர் பிராசீனர்.

வெதிரேகியில் பிரதிஞ்ஞையும் ஏதுவும் சமமேயாம். உதாகரண உபநய நிகமனங்களோ வேறுபடுகின்றன. அது, உயிர்த்திருக்குமுடல் ஆன்மாவோடு கூடியதாம்; பிராணன் முதலியவற்றை யுடைமையால் என்புழி, எது ஆன்மாவோடு கூடியதாகாதோ, அது பிராணன் முதலியவற்றை யுடையதாகாது; குடம்போல; இவ்வுயிர்த் திருக்குமுடல் பிராணாதிகளை யுடையதாகாததன்று; ஆதலால் அங்ஙனமன்று என வருதல்காண்க. (௩௨)

## ஏதுப்போலி.

அநுமிதியுமதன் கரணமுமாகிய இரண்டிலொன்றற்குத் தடையாய உணர்விற்கு விடயமாகுந் தர்மம், ஏதுப்போலித் தன்மையினுபாதி. அதனை யுடையது ஏதுப்போலி.

அது * அநைகாந்திகம் (பிறழ்வுடையது), விருத்தம் (மாறுகொள்வது), சற்பிரதிபக்ஷம் (மறுதலையுடையது), அசி

* இதனை நவீனர் சவ்வியபிசார மென்னும் பெயரான் வழங்குவர்.

த்தம் (பேறில்லது), பாதிதம் (மறுப்புடையது), என ஐந்தாம். அவற்றுள்:- க. சவ்வியபிசாரம் (பிறழ்ச்சியுடையது), அநைகாந்திகம். அது, சாதாரணம் (பொது), அசாதாரணம் (சிறப்பு), அநுபசங்காரி (முடிவுபெறுமை), என மூவகைத்து.

அவற்றுள், (க.) சபக்க விபக்கங்களி லிருப்பது, சாதாரணம். அது 'மலை புகையுடைத்து, அக்கினியுடைமையால்' என்பதாம். அக்கினியானது சபக்கமாகிய அடுக்களையினும் விபக்கமாகிய ஒழுகக்காய்ச்சிய இரும்பினு மிருக்கின்றது. ஆதலால் சாதாரணமாம். இவ்வுணர்வும் விபக்கத்தி லிருக்குந் தன்மையாகிய வியபிசாரவிஷய முடைமையால் வியபிசாரஞான விதியால வியாத்தியைக் கிரகித்தலிற் பிரதிபந்தகமாம்; வியபிசாரஞான முளதாயவழி வியாத்தியைக் கிரகித்தலுண்டாகாமை மிகப்பிரசித்த மாதலின்.

(உ) சபக்க விபக்கங்களி லில்லாது பக்கமாத்திரத்தி னிருப்பது அசாதாரணம். அது 'சத்தம் நித்தியம் சத்தத்தன்மை யுடைமையான்' என்பது. சத்தத்தன்மை, சபக்கமாகிய ஆகாய முதலியவற்றினும் விபக்கமாகிய குடமுதலியவற்றினும் இல்லாமல் பக்கமாகிய சத்தமாத்திரத்தினிருத்தலால் அசாதாரணமாம். இவ்வுணர்வும் சாக்ஷாத் அநுமிதியின் பிரதிபந்தகமாம். எங்ஙனமெனின், இங்ஙனமாம்:- சத்தத்தன்மை அந்நுவயி ஏதுவன்று; திருஷ்டாந்தமின்மையான். ஆனால் வெதிரேகியாம். அங்ஙனமே எது எதையுடையதன்க ணில்லாததாயிருக்கிறதோ ; அது தனதாசிரயத்தில் அதன் அபாவத்தைச் சாதிக்கின்றது. எப்படித் தூமம் வன்

ணியபாவத்தை யுடைய மடுமுதலியவற்றின்க ணில்லாததா யிருந்து, தனது ஆசிரயமாகிய பர்வதமுதலியவற்றில் வன்னி யபாவத்தின் அபாவத்தை (வன்னியை) ச் சாதிக்கின்ற தோ, அதுபோல சத்தத்தன்மை, நித்தியத் தன்மையையு டைய ஆகாயமுதலிய சபக்கத்தின்க ணில்லாததாய், தனது ஆசிரயமாகிய சத்தத்தில் நித்தியத் தன்மையின் அபாவமா கிய அநித்தியத் தன்மையைச் சாதிக்கின்றது. இவ்வாறே நித்தியத்தன்மையின் அபாவமுடைய குடமுதலிய விபக்கத் தின்க ணில்லாததாய், தனது ஆசிரயமாகிய சத்தத்தில் நித் தியத்தன்மையபாவத்தின் அபாவமாகிய நித்தியத் தன்மை யைச் சாதிக்கின்றது. ஒரே யிடமாகிய சத்தத்தில் நித்தியத் துவம் அநித்தியத்துவமென விரண்டு சம்பவியா; அவ்விர ண்டிற்கும் விரோத மிருத்தலின். ஆதலால் சத்தத்தன்மை யாகிய அசாதாரணத் தன்மையின் ஞானத்திற் சாத்தியாநு மிதியில்லை.

(௩) வஸ்து மாத்திரத்தைப் பக்ஷமாக வுடையது அநு பசங்காரி. அது 'யாவும் நித்தியம்; பிரமேயத் தன்மையால் (அளவையா னளக்கற்பாலதாகலின்)' என்பதாம். ஈண்டு யாவுமே பக்ஷமா யிருத்தலால் பிரமேயத்தன்மையாகிய ஏது அநுபசங்காரி. இவ்வுணர்வும் வியாத்தியைக் கவர்தலிற் பிரதி பந்தகமாம்; யாவும் பக்ஷமாயின் வியாத்தியைக் கிரகிக்கும் உடனிகழ்ச்சியுணர்வுக் கிடமின்மையால், உடனிகழ்ச்சி நிச் சயமில்லாதுழி வியாத்தி நிச்சயிக்கப்படாமையான்.

உ. சாத்தியாபாவத்தில் வியாபித்திருக்கும் ஏது விருத் தம். அது 'இது கோ, அசுவத் தன்மையால்' என்பதாம்.

ஈண்டும் 'யாண்டு யாண்டு அசுவத் தன்மையோ, ஆண்டாண்டுக் கோத்தன்மையின் அபாவமா' மென்னும் சாத்தியாபாவ வியாத்தி யிருத்தலால் அசுவத்தன்மையாகிய ஏது விருத்தமாம். இவ்வுணர்வும் சாக்ஷாத் அநுமிதிப் பிரதிபந்தகமாம். (பக்ஷத்தில்) கோத்தன்மையின் அபாவத்தான் வியாபிக்கப் பட்ட அசுவத்தன்மையுடைமையை யுணருங்கால், கோத்தன்மையின் நிச்சயம் சம்பவியாமையான்.

௩. சாத்தியா பாவத்தைச் சாதிக்கும் பிறிதோர் ஏது பிரதிபக்ஷம்; அதனையுடையது சற்பிரதிபக்ஷம். அது 'பர்வதம் வன்னியுடைத்து, புகையுடைமையான், அடுக்களைபோல; அது (மலை) வன்னியபாவ முடைத்து, பாஷாண மயத் தன்மையான் குட்டியம்போல' என வரும். ஈண்டும் இரண்டு ஏதுக்களுக்கும் ஒன்றற்கொன்று சாத்தியாபாவத்தைச் சாதிக்குந்தன்மை யிருத்தலின், ஒன்றற்கொன்று சற்பிரதிபக்ஷத் துவ முண்டு. இவ்வுணர்வும் சாக்ஷாத் அநுமிதிக்குப் பிரதிபந்தகமாம்; பர்வதம் வன்னிவியாப்பிய தூமமுடையதும், வன்னியபாவ வியாப்பிய பாஷாணமயத் தன்மை யுடையதுமாமென்னு மிருவகைப் பராமரிச முளதேல், ஒன்றினும் அநுமிதி யில்லாமையா லொன்றற்கொன்று பிரதிபந்தகமாதலான்.

௪. பராமரிசப் பிரதிபந்தக ஞான விஷய தர்மம் அசித்தி. அதனை யுடையது அசித்தம். அது ஆசிரயாசித்தம் (சார்பசித்தம்), சொரூபாசித்தம் (உருவசித்தம்), வியாப்பியத்தன்மை யசித்தமென மூவகைப்படும். அவற்றுள்:—(க)

பக்ஷத்தன்மை அவச்சேதகாபாவமுடைய (பக்ஷத்தன்மையையவரையும் தர்ம மின்றிய)பக்ஷத்தினை யுடையது ஆசிரயாசித்தம். அது 'ஆகாயத்தாமரை மணமுடைத்து, தாமரைத் தன்மையால், பொய்கைத் தாமரைபோலும்' எனவரும். ஈண்டும் அரவிந்தமாகிய பக்ஷத்தில் ஆகாயத் திருக்குந் தன்மையாகிய பக்ஷத்தன்மை யவச்சேதக மில்லையாகலின், அரவிந்தத் தன்மையாகிய ஏது ஆசிரயாசித்தமாம். இவ்வுணர்வு பராமரிசப் பிரதிபந்தகமாம்; அரவிந்தத்து ஆகாயத்திருக்குந் தன்மை யில்லை யென்றுணர்ந்துழி,மணத்தன்மை வியாப்பிய அரவிந்தத்தன்மை யுடையது ககனாரவிந்தமா மென்னும் பராமரிசம் சம்பவியாமையால், இது அரவிந்தத்தி லாகாயத் திருக்குந் தன்மையின் சம்பந்தத்தைக் கவர்வதா யிருத்தலின். (௨.) பக்ஷத்தினிருக்கும் அபாவப் பிரதியோகி சொருபாசித்தமாம். அது 'மடு திரவியம்; புகை யுடைமையால்' என்பதாம். ஈண்டும் பக்ஷமாகிய மடுவில் தூமத்தின் அபாவமிருத்தலான், தூமமாகிய ஏது சொரூபாசித்தம். இவ்வுணர்வும் பராமரிசப் பிரதிபந்தகமாம்; மடுவில் தூம மில்லையென்றுணர்ந்துழித் திரவியத்தன்மைவியாப்பியதூமமுடையது மடுவென்னும் பராமரிசம் சம்பவியாமையான்; இது மடுவில் தூமசம்பந்த முணர்வதா யிருத்தலின். (௩.) வியாப்பியத்துவ அவச்சேதகா பாவமுடைய ஏது வியாப்பியத்துவாசித்தம். அது 'மலை தீயுடைத்து, பொன்மயமான புகை யுடைமையால்' என வரும். ஈண்டும் தூமத்தில் வியாப்பியத்துவ அவச்சேதகத் தன்மையாகக் கருதப்பட்ட பொன்மயத்தன்மையில்லை யாகலின் தூமமாகிய ஏது வியாப்பியத்து

வாசித்தமாம். இவ்வுணர்வும் பராமரிசப் பிரதிபந்தகமாம்; தூமத்தில் பொன்மயத்தன்மை யில்லையென்றுணர்ந்துழி வன்னிவியாப்பிய பொன்மயத் தூமமுடையது மலையென்னும் பராமரிசம் சம்பவியாமையான், இது தூமத்தில் காஞ்சன (பொன்) மயத்தன்மையின் சம்பந்த முணர்வதா யிருத்தலின்.

ரு. சாத்தியாபாவ முடைய பக்ஷத்தை யுடையது பாதிதம். அது 'நெருப்புச் சூடில்லது, பதார்த்தத்தன்மையால், ஜலம்போல' எனவரும். ஈண்டும், வன்னியாகிய பக்ஷத்தில் சூடின்மையின் அபாவமாகிய உஷ்ணத்தன்மை தொக்கிந்திரியத்தால் நிச்சயிக்கப் படுதலால் பதார்த்தத் தன்மையாகிய ஏது பாதிதம். இவ்வுணர்வு சாக்ஷாத் (நேரே) அநுமிதிக்குப் பிரதிபந்தகமாம். வன்னியில் உஷ்ண மின்மை யில்லை யென்றுணர்ந்துழி, நெருப்புச் சூடில்லது என்னும் அநுமிதி சம்பவியாமையான், அதனபாவத்தின் இலௌகிக நிர்ணயம் அதையுடைமை ஞானத்தில் பிரதிபந்தகமா யிருத்தலின். ()

ஏதுப்போலி முடிந்தது.

---

அற்றேல், உபாதியும் ஏதுவிற்குத் தோஷமாதலால் சோபாதிக ஏதுப் போலியுமுளதாக: ஐந்தேயென லெங்ஙன மெனின், அற்றன்று; வியபிசாராதி ஞானத்தைப்போல உபாதிஞானத்திற்கு அநுமிதியும், அதன்கரணமும் ஆகிய இரண்டிலொன்றைப் பிரதிபந்திக்குந் தன்மையின்மையால், உபாதி ஏதுவிற்குத் தோஷமாதலின்மையான். * வாயுவநு

* இதனைத் தருக்க சங்கிரக வுரையிற் காண்க.

மானத்தில் உபாதி யுபந்நியசிக்கப்பட்டதெவ்வாறெனின், வியபிசாரஞானப் பிரயோஜகத்தன்மையாக ஆண்டு அஃது உபந்நியசிக்கப்பட்டதென்க. உபாதியாதெனின் உரைக்கப் படுகின்றது:—

சாத்தியத்தில் வியாபித்துச் சாதனத்தில் வியாபியாதது உபாதி (செயற்கை). 'மலை புகையுடைத்து, தீயுடைமையால்' என்புழி ஈரவிறகு (ஈரவிறகின் சையோகம்) உபாதி. அது சாத்தியமாகிய தூமத்தின் வியாபகமுமாம்; யாண்டு யாண்டுத் தூமம், ஆண்டாண்டு ஈரவிறகு (ஈரவிறகின் சையோகமு) ளதென்ப துண்மையான். சாதனமாகிய வன்னியின் அவ்வியாபகமுமாம்; யாண்டு வன்னி ஆண்டு ஈரவிறகு (ஈரவிறகின் சையோகம்) உளதென்ப தின்மையான். ஒழுகக் காய்ச்சிய இருப்புத்துண்டில் வன்னியிருக்கினும் ஈரவிறகு (ஈரவிறகின் சையோகம்) இன்மையான். இங்ஙனமே 'யாகத்திற் செய்யும் பசுக்கொலை அதர்ம சாதனமாம், கொலைமையான், யாகத்திற்குப் புறம்பான கொலையைப்போல' என்புழி நிஷித்தத் தன்மை உபாதி. அவ்வதர்ம சாதனமாகிய சாத்தியத்தின் வியாபக முண்டாகின்றது; யாண்டு யாண்டு அதர்ம சாதனத்துவம் ஆண்டாண்டு நிஷித்தத்துவமென் றிருத்தலான். சாதனத் தன்மையாகிய கொலைமையின் அவ்வியாபகமு முண்டாகின்றது; யாண்டு யாண்டுக் கொலைமை ஆண்டாண்டு நிஷித்தத்துவமென்ப தின்மையின்; பக்ஷமாக்கப்பட்ட கொலையிற் கொலைமையிருக்கினும் நிஷேதிக்கப்படுந் தன்மையின்மையான். இவ்வாறு 'கர்ப்பத்திலுள்ள சூரிய புத்திரன் கரியன்; சூரியபுத்திரத்தன்மையான். காணப்படுகின்ற

* சூரிய புத்திர ரனைவரைப்போல' வென்புழிச் சாகபாகங்க ளாலாகிய தன்மை உபாதியாம். கருமைக்குக் காகமுதலிய வற்றி னிருக்குங்கால் சாகபாகங்களாலாகிய தன்மை யின் மையான் சாத்திய வியாபகமாகாதெனு லில்லை; காகமுதலிய வற்றின்க ணில்லாத கருமையே ஈண்டுச் சாத்திய மாக லின். (௩௪)

அநுமான நிரூபணம் முடிந்தது.

## ௩. உவமானம்.

உவமிதி யறிவிற்குக் கரணம் உவமானம். அதுவும் சாதிருசிய ஞான (ஒப்புமையறிவு) வடிவினது. உவமிதித் தன்மையாகிய சாதி யுடையது உவமிதி. இஃது எங்ஙன முண்டாகின்றதெனின், உரைக்கப் படுகின்றது:—கவயம் (ஆமா - காட்டுப்பசு) உணராதானுகிய ஓர் நகரத்தான் ஓர் வனசரனைப் பார்த்து, கவயமென்னும் சொற்பொருள் எத் தன்மைத்தென்று கேட்க, அவன் 'ஆவினையொக்கும் ஆமா வென்னுஞ் சொற்பொருள்' என்றியம்பக் கேட்டஆவன் ஓர் கால் வனத்தையடைந்து, ஆவையொத்த பிண்டத்தைக் காண் புழி முற்கூறப்பட்ட * அதிதேச வாக்கியார்த்தத்தைச் சிந்தித்து, இது கவய மென்னுஞ் சொற்பொருளாமென அறிகின் றான். அது உவமிதி. ஈண்டு ஆவொப்புமையறிவு கரணம்; அதிதேச வாக்கியார்த்த ஸ்மரணம் வியாபாரம். (௩௫)

உவமான முடிந்தது.

---

* சனி, இயமன், யமுனை, வருணன், சுக்கிரீவன், கர்ணன் இவ்வறுவரும் சூரிய புத்திரர் எனப்படுவர்.

## ௫. சத்தம்.

* சாப்தப்பிரமாகரணஞான விஷயம் சத்தம். அது ஆற்றங்கரையி லேந்து பழங்க ளுளவென்றற் றொடக்கத்ததாம். வாக்கியார்த்த கோசரமான யதார்த்தஞானம் சாப்தபிரமா. ஈண்டுப் பதஞானம் கரணம்; பதத்தினுலாகிய பதார்த்த வுணர்ச்சி வியாபாரம். பதத்தா லறியப்படுபவற்றிற்கு ஒன்றற் கொன்றுள்ள சம்சர்க்கம் (சம்பந்தம்) வாக்கியார்த்தம். பத சமூகம் (பதங்களின் கூட்டம்) வாக்கியம். அர்த்தவாசகம் பதம். அது முக்கியம் கௌணம் என்னும் வேறு பாட்டால் இரு வகைத்து. எது சக்தி விருத்தியால் எந்தப்பொருளை யறிவிக்கின்றதோ, அது அப்பொருளில் முக்கியமாம். அது குதிரை குடை முதலிய வியக்தியை அறிவிப்பது, குதிரை குட முதலிய பதமாதல் போலவாம். இச்சொல்லானிப்பொரு ளுணரத்தக்கதுஎன்னும் வடிவினதாகிய அநாதி சங்கேதம் சக்தி. எது இலக்கணு விருத்தியான் எப்பொருளை யறிவிக்கின்றதோ, அது அப்பொருளில் கௌணமாகிய இலாக்ஷணிக மெனப் படுகின்றது. அது கங்கையிலிடைச்சேரி யென்புழிக் கங்கையென்னுஞ் சொல் கரையை யறிவிப்ப தாதல் போலவாம். சக்கிய சம்பந்தம் இலக்ஷணை (சக்கியம் சக்தி விருத்தியா லறிப்படும் பதப்பொருள்) கங்கை யென்னும் பதத்தின் சக்கியமாகிய பிரவகிக்கும் (ஓடும்) நீர்த் தொகுதிக்குக் கரையிலுள்ள சையோக சம்பந்தம், கங்கையென்னும் பதத்தி னிலக்கணையாம். அச்சத்தத்திற்கு

---

* 'ஆவினையொக்கும் ஆமாவென்னுஞ் சொற்பொருள்' என்னும் வாக்கியத்தை அதிதேச வாக்கிய மென்பர் நியாயநூலார்.

ஆகாங்க்ஷை(அவாய்நிலை), யோக்கியதை(தகுதி), சந்நிதி(அண்மை) என்பவை சககாரிகளாம். ச. எப்பதத்திற்கு எப்பதமின்றி அந்நுவயாநுபவத்தை (பொருள்கோ ளுணர்ச்சியை) யுண்டாக்குந் தன்மையில்லையோ, அப்பதத்திற்கு அப்பதத்தோடு (செவ்வையா யுச்சரிக்கப் படுகின்றமையால்) அவாய்நிலையாம். குடத்தைக் கொண்டுவா என்றல் முதலியவற்றிற் * காரகபதத்திற்குக் கிரியாபதம் (வினைச்சொல்) இன்றிக்குடம் செயப்படுபொருளா மென்னும் அந்நுவயாநுபவத்தையுமுண்டாக்குந் தன்மையின்மையால்; காரகபதத்திற்குக் கிரியாபதத்துடன் அவாய்நிலையாம். இவ்வாறே கிரியாபதத்திற்குக் காரகபதத்துடனும் (அவாய்நிலை) அறியத்தக்கதாம். ஆகையானே 'ஆ, குதிரை, புருஷன், யானை' என்றற்றொடக்கத்தனவற்றுள் அந்நுவயவுணர்வின்று; அவாய்நிலை யின்மையான். உ. ஒரு பதார்த்தத்திலுள்ள மற்றோர் பதார்த்தத்தின் சம்பந்தம் தகுதி. 'ஜலத்தாற் றெளிக்கின்றான்' என்றன் முதலியவற்றில் ஜலமென்னும் பதார்த்தத்தில் காரிய காரணத்தன்மையிலக்ஷணமாகிய தெளித்தலின் சேர்க்கையிருத்தலால் தகுதியாம். ஆகையானே 'தீயாற்றெளிக்கின்றான்' என்றற்றொடக்கத்தனவற்றுள் அந்நுவய போதமில்லை; தகுதி யின்மையான். ரு. பதங்களின் மறைப்பின்மை சந்நிதி. 'ஆவைக் கொணர்' என்றன் முதலியவற்றில் பதங்களை யிடையின்றி யுச்சரித்த

* காரகமெனல் 'விளிகுறை யிரண்டையும் விட்டவேற்றுமைகள், வினையான்முடியிற் காரகமெனப்பெறுங், குறையும் வினைகொளி னேரோவழிக் கூடும்' என்னும் இலக்கணக்கொத்துச் சூத்திரத்தாலுணர்க.

லால் சந்நிதி(அண்மை)யாம். ஆகையானே யாமத்திற் கொவ்வொன்ருகத் தனித்தனியே உச்சரிக்கப்படும் ஆவைக்கொணு வென்றன் முதலியவற்றில் அந்நுவய போதமில்லை; சந்நிதியின்மையான். அச்சத்தம் விதி, நிஷேதம், அர்த்தவாதம் என்னும் வேறுபாட்டால் மூவகைத்து. அவற்றுள் க. பிரவிருத்திபரமான வாக்கியம் விதி. அது 'ஜோதிஷ்டோமத்தால் சுவர்க்க காமன் யஜிக்கக்கடவன்; ஓதன காமன் தண்டுலத்தை (அரிசியை)ப் பாகஞ் செய்யக்கடவன்' என்பதாம். ஜோதிஷ்டோம மென்னும் யாகம் சுவர்க்கரூப இஷ்ட சாதனமும், தண்டுலகர்மகமான பாகம் ஓதனரூப இஷ்டசாதனமுமாமென்பது உபயவாக்கியார்த்தமாம்; 'யஜிக்கக் கடவன்' 'பாகஞ் செய்யக் கடவன்' என்றன் முதலிய விதிப்பிரத்தியயத்தான் (உணர்ச்சியான்) இஷ்டசாதனத்தன்மையடையப்படுதலான். உ. நிவர்த்திபரமான வாக்கியம் நிஷேதம். அது 'கலஞ்சம் (கஞ்சா) தின்னலாகாது' என்பதாம். கலஞ்சபக்ஷணம் இஷ்ட விசேஷ சாதன மன்றென்பது பொருள். இஷ்ட விசேஷமும் ஈண்டுப் பாவக்[illegible] புண்ணி பண்ணுமையேயாம்; அங்ஙனமே வாக்கிய தாற்பரிய மிருத்தலான். ங. விதிநிஷேதங்களுக்கு வேருய சத்தம் அர்த்தவாதமாம். அவை 'யாக ஸ்தம்பம் ஆதித்தன்' 'அக்கினி பனிக்கு மருந்து' 'வச்சிரஹஸ்தன் புரந்தரன்' என்றற்றொடக்கத்தன. அச்சத்தம் உலகத்திலும் வேதத்திலும் சமானமாம். (அவ்விரண்டிற்கும்) இத்துணையே விசேஷமாம்:—இலௌகிக வாக்கியத்துள் ஆப்தனற் சொல்லப்பட்ட சிலவே பிரமாணமாம். வேத வாக்கிய

மோ முழுதும் பிரமாணமாம்; பரமாப்தனுகிய பகவானுற் செய்யப்பட்டமையான் என்பது விசேஷம். (கூசா)

சத்த நிரூபணம் முடிந்தது.

---

## பிரமாணுந்தரமின்மை.

அர்த்தாபத்தியோ வேறு பிராணமன்று. பருத்திருக்குந் தேவதத்தன் பகலுண்ணுன் என்று காணுமிடத்தாதல், கேட்குமிடத்தாதல் பகலுண்ணுதவனுக்கு இராப்போஜனமின்றிப் பருமன் சம்பவியாதென் றுணர்ந்தபின், தேவதத்தன் இரவில் (கரந்து) உண்பானென்று நிச்சயிக்கப்படுகின்றது; அது வெதிரேக சாத்திய மாகலின். அஃதெங்ஙனமெனின், தேவதத்தன் இரவிலுண்பன்; பகலுண்ணுதிருக்கப் பருத்திருத்தலான். எவன் இரவி லுண்ணவில்லையோ, அவன் பகலுண்ணுதிருக்கிற் பருமனு முண்டாகாது; பகலுமிரவுமுண்ணுதவன் போல எனவரும். அர்த்தாபத்தி யென்பது வெதிரேகிக்கே மற்றோர் பெயராம். குடத்தை யுணர்ந்துழிக் குடத்தின் அபாவம் கிரகிக்கப்படாமையான், பிரதியோகி யுணர்ச்சியின்மை அபாவத்தைக் கிரகித்தலிற் பிரத்தியக்ஷத்திற்கே சககாரியாம்; வேறு பிரமாணமன்று; பிரத்தியக்ஷமாத்திரத்தான் அபாவத்தைக் கிரகித்தல் பொருந்துதலான்; அன்றெனிற் குடமில்லையென்று நிர்ணயித்தபின்னர், ஈண்டுக் குடத்தி னபாவத்தைச் சாக்ஷாத்கரிக்கின்றேன் என்னுந் தோற்றம் சம்பவியாமையின். (கூஎ)

---

# பிராமாணியவாதம்.

பிராமாணியம் (ஞானம்பிரமாணமாதல்) தானே கிரகிக்கப்படுகின்றதா, அல்லது பிறிதொன்றாற் கொள்ளப்படுகின்றதா வென்று விசாரிக்கப்படுகின்றது. தூரத்தினின்று பிரத்தியக்ஷத்தான் ஜலமுதலியவற்றி னுணர்வு பிறந்துழி, ஆண்டு, தானே யதார்த்த ஞானத் தன்மை வடிவினதாய பிராமாணியத்தை நிச்சயித்து, ஜல விருப்புடையோன் பிரவர்த்திக்கின்றான்; ஞானத்தைக் கவருங்கால் அதன்கண்ணுள்ள பிராமாணியமும் கவரப்படுதலால், பிராமாணியத்திற்கு ஞான முழுவதையுங் கிரகிப்பது கிரகிக்கப்படுவதெனுந் தன்மை வடிவமாகிய தானேயாந் தன்மை சம்பவித்தலால் என்பர் மீமாம்ஸகர். அஃதில்லை; தானே பிராமாணியத்தைக் கிரகிக்குமிடத்து ஞானத்தைக் கிரகித்தபின் ஒரோவிடத்துஎனக்குண்டாகிய ஜலஞானம் பிரமையா, அன்றுவென்னும் பிராமாணிய சம்சயமுண்டாக லாகாது; நிச்சயிக்கப்பட்டதில் சம்சயம் பொருந்தாமையான். சம்சயஸ்தலத்தில் ஞானத்தைக் கிரகித்தலு மில்லையெனலாகாது; ஞானத்தைக் கவராத காலத்து ஞான தர்மியையுடைய பிராமாணியமும் அதன்அபாவமுமாகிய (இரண்டு) கோடி (பக்ஷங்) களையுடைய சம்சயம் சம்பவியாமையால்; சம்சயத்தில் தர்மிஞானம் ஏதுவாயிருத்தலின். முன்னிற்பதாயவோர் உயரமுள்ள தர்மியை அறியாத காலத்து 'இது கட்டையா, புருடனா' என்னும் சம்சயமுண்டாகாது. ஆதலால் ஞானத்தில் பிறிதொன்றாற்றான் பிராமாணியம் நிச்சயிக்கப்படுகின்றது. அங்

ஙனமன்றோ, அப்பியாசமின்றிய தசையிற் கிடைத்த நீர்முத லியவற்றின் ஞானமுண்டாயகாலத்து, ஆண்டுப் பிராமாணிய சம்சய மிருந்தும் புருஷன் பிரவர்த்திக் (முயன்றுசெல்லு) கின்றான். அதன்பின் ஜலத்தை யடைந்த காலத்து எனக்கு ண்டாயிருந்த ஜலஞானம்பிரமையாம் (உண்மையநுபவமாம்); முயன்று சென்றது பயன்படச் செய்தலின். யாது பிரமை யன்றோ, அது பயன்படும் பிரவிருத்தியை உண்டு பண்ணு வதாகாது. ஜலப் பிரமம் (மயக்கம்) போல வென்னும் வெதி ரேகத்தான் அப்பியாசமின்றிய காலத்துக்கிடைத்த ஞானத் தின் பிராமாணியம் நிச்சயிக்கப்படுகின்றது. அப்பியாசதசை யிற் கிடைத்த ஜல முதலியவற்றின் ஞானங்களில் பிரவிருத் திக்குமுன்னும் அந்நுவயியாற் பிராமாணியம் நிச்சயிக்கப் படுகின்றது. ஆண்டே இரண்டாவது முதலிய ஜலஞானம் பிரமை; பயனுடைப் பிரவிருத்தியை யுண்டுபண்ணும் ஜாதி யுடைமையான்; முதல் ஜல ஞானத்தைப் போல என்பத னான். (௩அ)

பிராமாணியவாதம் முடிந்தது.

௪௩. (யான் சுகியென்னும் அநுபவத்திற்கு விஷயமாங் குணமாய்) தர்மத்தாலுண்டாவது சுகம். (௩௯)

௪௪. (யான் துக்கியென்னும் அநுவத்திற்கு விஷயமாங் குணமாய்) அதர்மத்தாலுண்டாவது துக்கம். (௪௦)

௪௫. இச்சைத்தன்மையாகிய சாமானியமுடையது இச் சை. அதுவும் பயனாகிய விஷயமுடையதென்றும், அதன் சா தன விஷய முடையதென்றும் இருவகைத்தாம். சுகமும் துக்க மின்மையும் பயனாம். அதன் இச்சையைக் குறித்துப்

பயனுணர்ச்சி மாத்திரம் காரணம். சாதன விச்சையைக் குறித்துப் பயனுக் கேதுவாந் தன்மை யுணர்ச்சி காரணம். (விசேட இச்சை - இராகம்.) (சக)

கசு. துவேஷத்தன்மையாகிய பொதுவியல் புடையதாதல், அனல்வடிவினதாதல் துவேஷம். அது துக்க விஷயம், அதன் சாதன விஷயம் என இருவகைத்து. துக்கத் துவேஷத்தைக் குறித்துத் துக்க ஞானமாத்திரங் காரணம். சாதன துவேஷத்தைக் குறித்துத் துக்க சாதனத்தன்மையின் ஞானம் காரணம். (துக்கமுதலிய துவேஷிக்கப்படும் பொருளுக்குச் சாதன வடிவாயுள்ள சேதன வஸ்துவை விடயஞ் செய்யும் துவேஷம் குரோதமெனப்படும்.) (சஉ)

கஎ. பிரயத்தனத்தன்மையாகிய பொது வியல்புடையதாதல், உற்சாக வடிவினதாதல் பிரயத்தனம். அது பிரவிருத்தி, நிவர்த்தி, ஜீவன யோனி யென்னும் வேறுபாட்டால் மூவகைத்து. (க) செய்யும் விருப்ப (இராக) த்தாற் றோன்றிய முயற்சி பிரவிருத்தி. (உ) துவேஷ சாதனத்தன்மையின் ஞானத்தாற் றோன்றிய முயற்சி நிவர்த்தி. ௩. சுவாசப்பிரசுவாசங்களுக்கு ஏதுவான முயற்சி ஜீவன யோனியாம். அதுவும் அதீந்திரியமாம். புத்தி, இச்சை, பிரயத்தனமென்பவை ஆன்மாமாத்திரத்திற் சமவேதித்துள்ளனவாம். அவற்றுள் ஈசுவரனிடத்திலுள்ளன நித்தியமும், ஜீவனிடத்திலுள்ளன அநித்தியமுமாம். (ச௩)

கஅ. ஆதியில் வீழ்ச்சிக்கு அசமவாயிகாரணம் குருத்துவம், அதுவும் பூமி ஜலங்களின் மாத்திரமிருப்பது. (சச)

கக. ஆதியில் ஒழுகுவதற்கு அசமவாயி காரணம் திரவத்துவம். அது சாம்சித்திகம் (இயல்பாயுள்ளது), நைமித்திகம் (நிமித்தத்தாலுள்ளது) என இருவகைத்து. அக்கினி சையோகத்தை அபேக்ஷியாத திரவத்துவம் சாம்சித்திகம். அது ஜலமாத்திரத்தி னிருப்பது. அக்கினி சையோகத்தை அபேக்ஷித்த திரவத்துவம் நைமித்திகம். அது நெய் முதலிய வடிவினதாய பூமி பொன்முதலிய வடிவினதாய தேயு வென்னும் அவ்விரண்டிடத்துமேயாம்; நெருப்பின் கூட்டத்தால் திரவத்துவம் உண்டாதலான். (சரு)

உ0. சிநேகத்தன்மையாகிய சாதியுடைய பசை வடிவினது சிநேகம். அதுவும் ஜலமாத்திரத்தினிருப்பது. கடலைப் பொடி முதலியவற்றைத் திரட்டுவது. நெய், எண்ணெய் முதலியவற்றிலுள்ள சிநேக வுணர்வு ஜல வுபாதியினையுடையது. குருத்துவதிரவத்துவ சிநேக மென்பவை பரமாணுவிலுள்ளன நித்தியமும், காரியத்திலுள்ளன அநித்தியமுமாம். ()

உக. வாசனைத் தன்மையாகிய சாதியுடையது வாசனை. அது வேகமும், நிலைபெறுத்துகையும், பாவனையும் என மூவகைத்து. (க) வேகத்தன்மையாகிய சாதியுடையது, வேகம். அது மூர்த்தத் திரவியத்தின்மாத்திரம் சமவேதித்திருப்பது. (உ) ஆசிரயத்தின் முன்னிலைமையைச் சம்பாதிக்கும் வாசனை நிலைபெறுத்துகை. அது பிருதிவிமுதலிய * நான்கினிரு

* பிருதிவிமாத்திரத்தி னுள்ளதென்பார் மதத்தில் அது விசேஷணமாம்.

ப்பது. வளைக்கப்பட்ட மரக்கிளை முதலியவற்றில் மீண்டும் அவ்விடத்து (முன்னிருந்தவிடத்து) நிலைத்தலை யுண்டுபண்ணுகின்றது. இவ்விரண்டும் கிரியையினாற் பெறப்படுவனவும், தம்மிற் றோன்றிய கிரியையினா லழியத்தக்கனவுமாம். (௩.) முன்னநுபவத்தாற் றோன்றி ஸ்மிருதிக்கு ஏதுவாஞ் சம்ஸ்காரம் பாவனை. அது ஜீவன்மாத்திரத்தி லிருப்பது. மூவகைச் சம்ஸ்காரமும் அநித்தியமேயாம். (சஎ)

உஉ, உ௩. விதிவினையாற் சாதிக்கப்படுவது தருமம். விலக்கு வினையாற் சாதிக்கப்படுவது அதருமம். இவ்விரண்டும் ஜீவன்மாத்திரத்திற் சமவேதித்துள்ளனவும், போகம் பிராயச்சித்த முதலியவற்றால் நசிக்கத்தக்கனவுமாம். (சஅ)

உச. செவியாற் கவரப்படுங் குணம் சத்தம். அது சையோகஜம் (கூட்டத்தாற்பிறந்தது) விபாகஜம் (பிரிவாற்பிறந்தது) சப்தஜம் (ஓசையாற்பிறந்தது) என மூவகைத்து. (க) அடிக்கப்படும் பேரியிலுண்டாகுஞ் சத்தமெதுவோ, அது சையோகஜம். ஆண்டுப் பேரிக்கும் ஆகாயத்திற்கு முள்ள சையோகம் அசமவாயிகாரணம், பேரிக்குந் தண்டத்திற்கு முள்ள சையோகம் நிமித்தகாரணம். (உ) பிளவுபடும் மூங்கிலி லுண்டாஞ் சடசடவோசை விபாகஜம். ஆண்டு மூங்கிற்பிளவிரண்டற்கும் ஆகாயத்திற்குமுள்ள விபாகம் அசமவாயிகாரணம். மூங்கிற் பிள விரண்டன் பிரிவு நிமித்தகாரணம்.

(௩) * வீசிதரங்க நியாயத்தானேனும், † கதம்பகோளக நியாயத்தானேனும் உண்டாகும் இரண்டாவதுமுதலிய சத்தங்களெவையோ, அவை சத்தஜங்களாம். (சத்தத்தாற் றோன்றியனவாம்). ஆண்டுப் பின்பின் சத்தத்தில் முன்முன் சத்தம் அசமவாயி காரணமாம். அநுகூலமான காற்று முதலியன நிமித்தகாரணம். மீண்டும் சத்தம் எழுத்து வடிவம் ஒலிவடிவம் என இருவகைத்து. (க) அண்ணமுதலியவற்றின் வியாபாரத்தாற் றோன்றுவது எழுத்து வடிவம். (உ) மிருதங்க முதலியவற்றாற் றோன்றுவது ஒலிவடிவம். எல்லாச் சத்தங்களும் ஆகாயமாத்திரத்திற் சமவேதித்திருப்பனவாம். ஜீவாத்மாவைச் சமவேதித்திருக்கும் புத்தி, சுகம், துக்கம், இச்சை,

* சமுத்திர ஜலத்தில் ஓரலையி னுனிப்பாகத்தில் மற்றோரலையெழும்புகின்றது. அவ்வலையி னுனிப்பாகத்தில் மற்றோரலை யெழும்புகின்றது. இவ்வாறே ஒரே கிழக்குமுதலிய திக்கில் அவ்வலைகளது பரம்பரையின் பிரவாகம் போய்க்கொண்டே யிருக்கும். அதுபோல முதற் சத்தத்தினின்றும் இரண்டாவதும், இரண்டாவதினின்று மூன்றாவதுமாக, முன்முன் சத்தங்களினின்றும் பின்பின் சத்தங்களி னுற்பத்தி ஒரே கிழக்குமுதலிய திக்கில் உண்டாய்க்கொண் டிருக்கும். இஃது வீசிதரங்க நியாயம்.

† கதம்ப கோளகத்தின் நடுவினின்று எல்லாத் திக்குகளையு நோக்கி இதழ்கள் எழுகின்றன. அதுபோல எந்த நடுவிடத்தில் முதற் சத்த முண்டாகின்றதோ, அதினின்றுங் கிழக்கு முதலிய பத்துத் திக்குகளினும் பத்துச் சத்தங்களுண்டாய், அப்பத்துச் சத்தங்களினின்றும் வேறு பத்துச் சத்தங்க ளுண்டாம். இவ்வாறு பத்துத் திக்குகளிலும் முன்முன் சத்தங்களினின்றும் பின்பின் சத்தங்க ளுண்டாகின்றன. இஃது கதம்பகோளக நியாயம்.

துவேஷம் முயற்சி யென்பவைகளும், சத்தமும் இரண்டு க்ஷணம் நிற்பனவாய் மூன்றாவது க்ஷணத்தில் நசிக்கின்றன. விபுத்திரவியங்களின் யோக்கிய விசேஷகுணங்களுக்குத் தம திரண்டாவது கணத்திற் றோன்றுவனவற்றான் (தமக்கடுத்த கணத்திற் றோன்றித் தம்மோ டொருங்குநிற்கும் விபுயோக்கிய விசேஷ குணங்களால்) நாசமுண்டாதல் நியமமாகலின்.

குணநிரூபணம் முடிந்தது.

---

## ரு. கர்மம்.

மேலிடங் கூடுதற்கேதுவான கர்மம் எழும்பல். கீழிடங் கூடுதற் கேதுவான கர்மம் வீழ்தல். தன் சமீபத்திற் கூடுதற் கேதுவான கர்மம் வளைதல். தன்னிற்றூரத்திற் கூடுதற்கேது வான கர்மம் நிமிர்தல். ஏனைய வெல்லாக் கர்மமும் நடத்தல். ஐவகைக் கர்மமும் மூர்த்தத்திரவியத்தன்மை மாத்திரத்திற் சமவேதித்திருக்கும் அநித்தியமேயாம். பிற்சையோகத்தா னும் ஓர்காலத்து ஆசிரயம் (தன்சார்பு) நசித்தலானும் (அது) நசிக்கின்றது. (ருப)

கர்மநிரூபணம் முடிந்தது.

---

## சு. சாமானியம்.

அதுகம்தசத்தி னிருக்கும் * சாமானியம் பரம். அது சத் தையென்பது திரவியாதி மூன்றினிருக்குந் தன்மையான் மற்றச் சாமானியத்தை யபேக்ஷித்து அதிகதேசத்தி னிருப்ப தாதலாம். அற்பதேசத்தி னிருக்கும் சாமானியம் அபரம்.

* சாமானியத்தை நியாயநூலிற் சாதியென்றுங் கூறுவர்.

அது திரவியத்தன்மை குணத்தன்மை கர்மத்தன்மை முத லியன சத்தையை யபேக்ஷித்து அற்பதேசத்திருப்பன வாத லாம். மீண்டும் சாமானியம் ஜாதிவடிவினது உபாதிவடிவி னது என இருவகைத்தாம். சாக்ஷாத்தாகச் சம்பாதிக்கப் பட்ட சாமானியம் ஜாதிவடிவினது. அது சத்தை, திரவியத் தன்மை முதலியவற்றைப் போன்றதாம். பரம்பரையாகச் சம்பந்திக்கப்பட்ட சாமானியம் உபாதிவடிவினது. அது பிரமேயத்துவம் ஞேயத்துவ முதலியனவும் தண்ட முடை மை குண்டல முடைமை முதலியனவும் போலவாம். பிர மாத்தன்மையே பரம்பரைச் சம்பந்தத்தான் குடமுதலியவ ற்றினிருக்கும் பிரமேயத்தன்மையா மென்றிவ்வாறு அறிய த்தக்கதாம். (௫க)

சாமானியநிரூபணம் முடிந்தது.

---

## விசேஷ சமவாயங்கள்.

நித்தியத்திரவியங்களி லிருக்கும் விசேஷங்களுக்கும் சாமானியத்திற்கும் விசேஷமாய்ப் பிரிவின்மையான் முற் கூறிய சாமானிய லக்ஷணமே * முடிக்கத்தக்கதாம். ஆனால் விசேஷத்தை யங்கீகரியாவிடின் சமான ஜாதி குணக் கிரி யைகளையுடைய பரமாணுக்கள் ஒன்றற்கொன்று வேறென் னும் புத்தி யுண்டாகாது. ஆண்டு அங்கீகார முளதேல் யோகிகளுக்கும் அத்தகைய பரமாணுக்களின் ஞானசங்கர

---

* இது கௌதமர் முதலியோர் மதம். கணதமுனிவரொருவரே விசேஷ பதார்த்த மங்கீகரித்தவர். அதனாற்றான் அவர் சாத்திரத்தை விசேஷசாத்திர மென்றும், அவர் வழிப்பட்டோரை வைசேஷிக ரென்றுங் கூறுகின்றனர்.

மூ (கலப்பு) ண்டாகும். இவ்வாறு சேர்க்கையாற் சித்தித்த இரண்டின் சையோகத்தைப்போலச் சேர்க்கையின்றிச் சித்தித்த இரண்டின் சம்பந்தமாகிய சமவாயம் அவசியமாம். எவ் விரண்டனுள் ஒன்று தனது அழிவுற்ற நிலையில் மற்றொன் றின் ஆசிரிதமாகவே நிற்குமோ, அத்தகைய விரண்டும் சேர்க்கையின்றிச் சித்தித்தனவாம். இவ்விரண்டும் அவயவ அவயவி, குண குணி, வினை வினைமுதல், ஜாதி வியக்தி, விசேஷம் நித்தியத்திரவியம் என ஐந்துவகைப்படும். அவயவி முதலியன நசியாதனவாய் அவ்யவ முதலியவற்றை யாசிர யித்தனவாகவே நிற்கின்றன. (அவயவிமுதலியன) அவய வாதி யழிந்தபின் நசித்துக் கணமாத்திர மாசிரிதமில்லாதன வாகவே நிற்கும். (௫௨).

விசேஷ சமவாயங்களின் நிரூபணம் முடிந்தது.

---

## ௭. அபாவம்.

தாதான்மிய சம்பந்தாவச்சின்ன (அதன்வடிவாஞ் சம்ப ந்தத்தான் வரைந்து கொள்ளப்பட்ட) பிரதியோகித்தன்மை யையுடைய அபாவம் * அந்நியோந்நியாபாவமாம் (ஒன்றிலொ றின்மையாம்). அதுவும் 'கடம் படமன்' றென்றற்றொடக்க த்தப் பிரத்தியயங்களாற் பிரசித்தமாம். அந்நியோந்நியா பா வத்திற் கந்நியமான அபாவம் சம்சர்க்காபாவம். அது பிரா கபாவமும், பிரத்வம்சாபாவமும், அத்தியந்தாபாவமும் என மூவகைத்து. உற்பத்திக்குமுன் சமவாயிகாரணத்திலு ள்ள காரியத்தின் சம்சர்க்காபாவம் பிராகபாவமாம் (முன்

---

* அந்நியோந்நியாபாவத்தையே பேதமென்றுங் கூறுவர்.

ணின்மையாம்). அதுவும் இக்கபாலத்திற் குடமுண்டாகு மென்னும் பிரத்தியயத்தாற் பிரசித்தமாம். உற்பத்திக்குப் பின் சமவாயிகாரணத்திலுள்ள காரியத்தின் சம்சர்க்காபாவம் பிரத்தொம்சாபாவமாம். (அழிவுபாட்டின்மை, பின்னின்மை யெனவும் பெயர் பெறும்.) அதுவும் இக்கபாலத்திற் கடமழிந்ததென்னும் பிரத்தியயத்தாற் பிரசித்தமாம். மூன்று காலத்திலுமுள்ள சம்சர்க்கா பாவம் அத்தியந்தாபாவமாம். (முழுதுமின்மையாம்). அதுவும் இப்பூதலத்திற்குடமில்லை யென்னும் பிரத்தியயத்தாற் பிரசித்தமாம். இவ்வாறே * மற்றவைகளும் இதன்கண்ணே யடங்கும்; யாண்டு ஆலோகம் (ஒளி) இல்லையோ, ஆண்டே அந்தகார வழக்கிருத்தலின் அந்தகாரம் ஆலோக மின்மையினடங்கும் என்பதுபோல. ()

அபாவ நிரூபணம் முடிந்தது.

V. B. SUBRAHMANIYASARMA
TAMIL-PANDIT.

அவ்வியாப்தியாதி.

இலக்கண தோஷங்களாகிய அவ்வியாப்தி, அதிவியாப்தி, அசம்பவ மென்பவை ஏற்கும்வண்ணம் ஏதுப்போலியி லடங்கும். இலக்கியத்தின் ஏகதேசத் திலக்கணமில்லாதிருப்பது அவ்வியாப்தி. அது 'சிகை சூத்திரமுடையவன் பிராம்மணன் என்பதற்குச் சந்நியாசியினிடத்து அவ்வியாத்தியாம்; அவனுக்குச் (சந்நியாசிக்கு) சிகை சூத்திரமுடைமை யின்மையின்' என்பதாம். இலக்கிய மல்லாத தன்கண் இலக்கணம்

---

* இஃது இம்மூன்றற் கந்நியமாய்ப் பிராசீனர் அங்கீகரித்துள்ள சாமயிகாபாவமுதலியனவும் இதனுள் அடங்குமென்று கூறியதாம்.

செல்லுதல் அதிவியாப்தி. அது 'மனிதன் பிராமணன் என்னும் இலக்கணத்திற்குச் சூத்திரனிடத்து அதிவியாப்தியாம்; அவனுக்கும் (சூத்திரனுக்கும்) மனிதத்தன்மை யிருத்தலான்' என்பதாம். இலக்கிய முழுவதினும் இலக்கணமில்லாதிருப்பது அசம்பவம். அது 'சுண்ட (துதிக்கை) தண்டங்களையுடையவன் பிராமணன் என்னும் இலக்கணம் அசம்பவமாம்; எப்பிராமணனுக்கும் சுண்ட தண்ட மின்மையால்' என்பதாம். இம்முக்குற்ற மின்மை இலக்கணம். அது 'புனிதமுள்ள மாதா பிதாக்களாற் பெறப்படுந் தன்மையுடையவன் பிராமணன்' என்பதாம். புனிதத் தன்மையும் அறுதொழிலதிகார முடைமை. (ருச)

இத்துணை நூலான் எல்லாப் பதார்த்தங்களுக்கும் உத்தேசமும் இலக்கணமும் செய்யப்பட்டன. பாலர்களுக் குபயோக மின்மையாற் பரீக்ஷைமாத்திர மெழுதப்படவில்லை. இலக்கியத்தன்மையை வரைந்துகொள்ளுதல்மாத்திரத்தான் இலக்கியத்தைக் கீர்த்தித்தல் உத்தேசம். அசாதாரண தர்மம் (சிறப்பியல்பு) இலக்கணம். உத்தேச விலக்கணங்களின் பொருத்தம் பொருத்தமின்மை யென்னு மிரண்டி லொரு பயனையுடைய விசாரம் பரீக்ஷை. அற்றேல் இப்பதார்த்த நிரூபணம் நிஷ்பிரயோஜனமாம்; அதனுலாகிய பதார்த்தங்களின் தத்துவஞானம் சுகம், துக்கமின்மை, அவற்றின் சாதனமென்பவற்றின் வேறாந் தன்மையால் பிரயோஜனமாதலின்மையாலெனின் அற்றன்று; பதார்த்தங்களின் தத்துவஞானம் ஆன்மதத்துவஞானவாயிலாக மோக்ஷசாதன மாதலால் இறுதித் துன்பத்தின் அழிவுபாடு மோக்ஷமாம். அது

வும் தனது சமானாதிகரணத்துள்ள (தன்னோடு ஒருங்குநிற்கும்) துக்கப் பிராகபாவசமானகாலமல்லாத காலத்துத் துக்கத்தொம்சமாம். சம்சார காலத்துத் துக்கத் தொம்சம் மோக்ஷமாமென்பதை நீக்குதற் பொருட்டு, காலசம்பந்தமின்றியதெனத் துக்கத் தொம்ச விசேஷணமும், நம்மனோரது துக்க சமான காலத்துச் சுகமோக்ஷத்தில் அதிவியாத்தி நீக்குதற்பொருட்டுத் தனது சமானாதிகரண முள்ளதெனத் துக்க விசேஷணமும் தரப்பட்டன. (௫௫)

தேவர் தமக்குத் தெவ்வாகுந் திதியின் மைந்தர்ச் செகுத்தோனைப்
பூவி லுறைவாள் புவிமாது தழுவம் புறத்துத் தூயோனை
பாவு தூய்மைச் சுரநீரைப் பததா மரையிற் றந்தோனைத்
தாவில் வளையேந் தியவாசு தேவன் றனைக்கை கூப்புதுமே.

தருக்கசௌமுதி முடிந்தது.

சிவமயம்.

**கௌதமமுனிவராற் செய்யப்பட்ட நியாயசாஸ்திரத்திற் கூறிய பதினறு பதார்த்தங்கள் சுருக்கமாக நிருபிக்கப்படுகின்றன.**

**பதார்த்தம்** பிரமாணம், பிரமேயம், சம்சயம், பிரயோசனம், திருஷ்டாந்தம், சித்தாந்தம், அவயவம், தர்க்கம், நிர்ணயம், வாதம், ஜல்பம், விதண்டை, ஏதுப்போலி, சலம்,ஜாதி, நிக்கிரகஸ்தானம் என்பனவாம்.

அவற்றுள்,

க. **பிரமாணம்** பிரத்தியக்ஷம, அநுமானம், உவமானம், சப்தம் என்னும் பேதத்தால் நான்குவகைப்படும். (க) பிரத்தியக்ஷம் பாகியம் அந்தரமென இருவகைப்படும். பாகியப்பிரத்தியக்ஷமும் கிராணம், இரசனம், சக்ஷு, துவக்கு, சுரோத்திரமென ஐவகைத்தாம். மனம் அந்தரப்பிரத்தியக்ஷம். (உ) அநுமானம் பூர்வவத் (காரணத்தை இலிங்கமாகவுடைய அநுமானம்) சேஷவத் (காரியத்தை இலிங்கமாகவுடைய அநுமானம்), சாமனியதோதிருஷ்ட (காரண காரியங்களுக்கு வேறுகிய இலிங்கத்தையுடைய அநுமான)மென மூவகைப்படும். அம்மூவகை யநுமானமும் சுவார்த்தம் பரார்த்தமென மீண்டும் இருவகைப்படும். (௩) உவமானப்பிரமாணம் சாதிருசியவிசிஷ்டபிண்டஞானம் (சமானவியல்படுத்த பிண்டவுணர்வு), வைதர்மியவிசிஷ்டபிண்டஞானம் (வேற்றியல்படுத்த பிண்டவுணர்வு), அசாதாரணவிசிஷ்ட பிண்டஞானம் (சிறப்பியல்படுத்த பிண்டவுணர்வு) என மூவகைப்படும். (ச) சத்தம் திருஷ்டார்த்தகம் (ஓதனகாமன் அடுதலைச்செய்க என்றல் முதலிய காணப்படுபொருளைச் சொல்வது), அதிருஷ்டார்த்தகம் (சுவர்க்ககாமன் எரியோம்புக என்றல் முதலியகாணப்படாத பொருளைச்சொல்வது) என்னும்பேதத்தால் இருவகைப்படும்.

௨. **பிரமேயம்** ஆன்மா, சரீரம், இந்திரியம், அர்த்தம், புத்தி, மனம், பிரவிருத்தி, தோஷம், பிரேத்தியபாவம், பலம், துக்கம், அபவர்க்கம் எனப் பன்னிருவகைத்தாம். (௧) ஆன்மா ஜீவான்மா ஈசுவரான்மா வென இருவகைப்படும். ஜீவான்மா நாநா. ஈசுவரான்மா ஏகம். இருவகை யான்மாவும் நித்தியமும் விபுவுமாம். (௨) சரீரம் ஜராயுஜம், அண்டஜம், சுவேதஜம், உற்பிஜ்ஜமென நான்குவகைப்படும். (௩) இந்திரியம் கிராணம், இரசனம், சக்ஷு, துவக்கு, சுரோத்திரம், மனம் என ஆறும். (௪) * அர்த்தம் உருவம், இரசம், கந்தம், பரிசம், சப்தம், புத்தி, சுகம், துக்கம், இச்சை, துவேஷம், பிரயத்தனமெனப் பதினொருவகைப்படும்; அல்லது திரவியம், குணம், கர்மம், சாமானியம், விசேஷம், சமவாயமென அறுவகைப்படும். (௫) புத்தி நித்தியம் அநித்தியமென இருவகைப்படும். அவற்றுள், ஈசுவரான்ம புத்தி நித்தியமும், ஏகமும், பிரத்தியக்ஷரூபமுமாம்; ஜீவான்ம புத்தி அநித்தியமாம். அவ்வநித்தியபுத்தியும் அநுபவம் ஸ்மிருதியென இருவகைப்படும். அவ்விருவகை யநித்தியபுத்தியும் யதார்த்தம் அயதார்த்தமென இருவகைத்தாம். அவற்றுள் யதார்த்தாநுபவம் பிரத்தியக்ஷம், அநுமிதி, உவமிதி, சாப்தமென நான்குவகைப்படும். அயதார்த்தாநுபவம் சம்சயம், விபரியயம், தர்க்கமென மூவகையாம். (௬) மனம் நாநாவும், நித்தியமும், அணுவுமாம். (௭) பிரவிருத்தி வாக்காரம்பம் (வசனித்தற் கநுகூலமாயது), புத்தியாரம்பம் (தியானித்தற் கநுகூலமாயது), சரீராரம்பம் (உடற்சேட்டைக் கநுகூலமாயது) என மூவகைப்படும். (௮) தோஷம் இராகம், துவேஷம், மோகமென மூவகைத்து. அவற்றுள் (1) இராகம் காமம் (மைதுனவிச்சை), மற்சரம் (தன்பயனை விசாரியாமலே பிறன் விரும்பியதைத் தடுக்கவிரும்புதல்), ஸ்புருஹை (தர்ம

* ஒவ்வோ ரிந்திரிய மாத்திரத்தாற் கவரப்படும் விசேஷ குணம் அர்த்தமாம்.

விரோதமின்றிய பொருளை யடைய விரும்புதல்), * திருஷ்ணை (இஃதென்னுடையது ஒருநாளுங் கெடலாகாதெனும் விருப்பம்), உலோபம் (தர்மவிரோதமாகப் பிறர்பொருளை விரும்புதல்), மாயை (பிறரை வஞ்சிக்க விரும்புதல்), இடம்பம்(உள்ளே தர்மமுடைமை யில்லாதிருந்தும் வெளியில் தர்மமுடையவனாகத் தனது மேன்மையை யறிவிக்க விரும்புதல்) எனஏழாம். (2) துவேஷம் குரோதம் (கண் சிவத்தல் முதலியவற்றிற்குக் காரணமாகிய துவேஷவிசேஷம்), ஈர்ஷை (ஓர் சாதாரணவஸ்துவில் பிறனுடைமையாக அவ்வஸ்துவைக்கிரகிக்கும்புருஷனிடத்துண்டாவது), அசூயை (அந்நிய புருடர்களது வித்தைமுதலிய குணங்களிலுண்டாவது), துரோகம் (அந்நியரைக் கெடுக்கும்பொருட்டுண்டாவது), அமர்ஷம் (குற்றஞ் செய்வோன்பேரில் சாமர்த்தியமின்றிய புருடனுக்குண்டாவது), அபிமானம் (அபகாரஞ் செய்தவனுக்கு அற்பமும் துன்பத்தைச் செய்யச் சாமர்த்திய மில்லாதவனுக்குத் தனது ஆன்மாவினிடத் துண்டாகும் துவேஷம்) என ஆறும். (3) மோசம் விபரியயம் (மித்தையானயவுணர்வு), சம்சயம் (ஒருதர்மியின் மாறுபட்ட பலதருமங்களான் விசேடிக்கப்பட்ட வுணர்வு), தருக்கம் (வியாப்பியத்தை யாரோபித்தலான் வியாபகத்தை யாரோபிப்பது), † மானம் (தன்னிடத்தில் இல்லாத குணங்களை யாரோபித்துக்கொண்டு உயர்வாகக் கருதும்புத்தி), பிரமாதம் (முன் கர்த்தவ்வியாகர்த்தவ்வியங்களாக நிச்சயித்தவற்றிலுண்டாகும்அகர்த்தவ்விய கர்த்தவ்வியத்தன்மையாகிய வுணர்வு), பயம் (அநிஷ்டஞ் செய்பவன் யாதேனும் ஓர் காரணம் வாய்த்தகாலத்து அதனை விடுதற்குத் தகுதியில்லா

* எக்காரியத்தில் எவ்வளவு பணம் செலவிடுதல் உசிதமோ, அக்காரியத்தில் அவ்வளவு பணத்தைச் செலவிடாது காத்தல் கார்ப்பண்யமாம் (கிருபணத்தன்மையாம்). இதுவும் திருஷ்ணை விசேஷமேயாம்.

† குணவான்களிடத்துக் குண மின்மையைக் கருதுதல், ஸ்மயமெனப்படும். இது மானத்தில் அடங்கும்.

மையை யறிதல்), சோகம் (இஷ்டவஸ்து பிரிந்தகாலத்து அது மீண்டும் கிடைத்தற்குரியதாகாமையை யுணர்தல்) என வேழாம்.

(கூ) மரித்தபின்னுண்டாம் பிறப்பு பிரேத்தியபாவம். (கo) பலம் முக்கியம் (சுகதுக்க சாக்ஷாத்காரம்), கௌண (முக்கியபலசாதன) மென இருவகைத்து. (கக) துக்கம் யான் துக்கி யென்னும் உணர்ச்சி யான் எல்லாப் பிராணிகளுக்கும் பிரசித்தமாயுள்ளது. (கஉ) சரீரமுதலிய இருபத்தொரு துக்கங்களின் அத்தியந்த நிவர்த்தி அபவர்க்கமெனப்படும்.

ங. சம்சயம் சாதாரண தர்மமுடைத் தர்மியாற் றோன்றியது, அசாதாரண தர்மமுடைத் தர்மியாற் றோன்றியது, விப்பிரதிபத்தி வாக்கியத்தாற் றோன்றியது என மூவகைப்படும். அச்சம்சயம் பகிர்விஷயகம் (புறவிடயத்தது), அந்தர்விஷயகம் (உள்விடயத்தது) என மீண்டும் இருவகைப்படும். அவற்றுள் பகிர்விஷயக சம்சயம் திருசியமானதர்மிகம் (காணப்படுந் தர்மியினது), அதிருசியமானதர்மிகம் (காணப்படாத தர்மியினது) என இருவகைப்படும்.

ச. பிரயோஜனம் முக்கியம் (சுகம்துக்காபாவம்), கௌண (முக்கியப் பிரயோஜனசாதன) மென இருவகைத்து.

ரு. வாதிப்பிரதிவாதிகளது நிச்சயத்திற்கு விஷயமாகும் பதார்த்தமாகிய திருஷ்டாந்தம் சாதர்மியம் (அந்வயதிருஷ்டாந்தம்), வைதர்மிய (வெதிரேக திருஷ்டாந்த) மென இருவகைத்து.

சா. சித்தாந்தம் (சாஸ்திரமுணர்ந்தவன் பிரமாண முடைமையால் அங்கீகரித்த பொருள்.) சர்வதந்திர சித்தாந்தம், பிரதிதந்திரசித்தாந்தம், அதிகரண சித்தாந்தம், அப்பியுபகம சித்தாந்தமென நான்கு வகைப்படும்.

எ. அவயவம் பிரதிஞ்ஞை, ஏது, உதாகரணம், உபநயம், நிகமனம் என ஐவகைப்படும். அவற்றுள் ஏதுவெனும் அவயவம் அஞ்ஞாத

வெதிரேக வியாப்திக ஏதுபோதகம், அப்பிரதீதாந்வய வியாப்திக ஏதுபோதகம், பிரதீதாந்வய வெதிரேக வியாப்திக ஏதுபோதகமென மூவகைப்படும் உதாகரணமென்னும் அவயவம் அந்வயவியாப்தி போதகம் வெதிரேக வியாப்திபோதகமென இருவகைப்படும். உபநய மெனும் அவயவம் அந்வயி, வெதிரேகியென இருவகைப்படும்.

௮. **தர்க்கம்** ஆன்மாசிரயம், அந்நியோந்யாசிரயம், சக்கிரிகை, அநவஸ்தை, பிரமாண பாதிதார்த்தப் பிரசங்கமென ஐவகைப்படும். அவற்றுள் ஆன்மா சிரயம், அந்நியோந்நியாசிரயம், சக்கிரிகை யென்னும் மூன்றுதர்க்கமும் உற்பத்தி, ஸ்திதி, ஞப்தியென மும்மூன்று வகைப்படும். அல்லது தர்க்கம் வியாகாதம், ஆன்மா சிரயம், இதரேதராசிரயம், சக்கிரிகாசிரயம், அநவஸ்தை, பிரதிபந்தி கற்பனை, கௌரவம், உத்ஸர்க்கம், அபவாதம், வைஜாத்தியம் எனப்பதினொரு வகைப்படும். அத்தர்க்கம் விஷயபரிசோதகம், வியாப்திகிராகமென மீண்டும் இருவகைப்படும்.

௯. **நிர்ணயம்** பிரமாணத்தின் பலமாகிய நிச்சய வடிவினதாகிய ஞானம்.

௧௦. **வாதம்** தத்துவ (உண்மை) ப் பொருளை யறியும் வேட்கை யுடைய புருடர்கள் இருவரில் ஒருவருக் கொருவர் உண்டாகும் வினா விடையாகிய கதை.

௧௧. **ஜல்பம்** ஒருவரை யொருவர் வெல்ல வேண்டுமென்னும் விருப்புடைய புருஷர்களது இரண்டுபக்ஷங்களையும் ஸ்தாபித்தலாகிய கதை.

௧௨. **விதண்டை** வெல்லும் வேட்கையுடைய புருடர்களின் தமதுபக்ஷத்தை ஸ்தாபித்தலில்லாக் கதை.

௧௩. **ஏதுப்போலி.** இதனை யநுமான நிரூபணத்திற் காண்க.

௧௪. **சலம்** ஒருபொருள் கருதிச் சொல்லியதற்கு வேறுபொருள் கற்பித்துக்கொண்டு பழித்தல். அது வாக்குச்சலம், சாமானிய சலம், உபசாரசலமென மூவகைப்படும்.

கடு. சாதி போலிபுத்தரம். அது சாதர்மிய (பொதுவியல்பு) சமை, வைதர்மிய (வேற்றியல்பு) சமை, உத்கர்ஷ (உயர்ச்சி) சமை, அபகர்ஷ (தாழ்ச்சி) சமை, வர்ணிய (புகழ்ந்துரை) சமை, அவர்ணிய (பழித்துரை) சமை, விகற்பசமை, சாத்தியசமை, பிராப்தி (அடைவு) சமை, அப்ராப்தி (அடையாமை) சமை, பிரசங்கசமை, பிரதி (வேறு) திருஷ்டாந்தசமை, அநுற்பத்தி (உற்பத்தியின்மை) சமை, சம்சய (ஐய) சமை, பிரகரணசமை, * ஏதுசமை, அர்த்தாபத்திசமை, அவிசேஷ (விசேடமின்மை) சமை, உபபத்திசமை, உபலப்திசமை, அநுபலப்திசமை, நித்தியசமை, அநித்தியசமை, காரியசமை என இருபத்து நான்காம்.

கசு. நிக்ரகஸ்தானம் தோல்விக்கு ஏது. அது பிரதிஞ்ஞாஹானி (மேற்கோளழிவு), பிரதிஞ்ஞாந்தரம் (வேறுமேற்கோள்), பிரதிஞ்ஞாவிரோதம் (மேற்கோண்மாறுபாடு), பிரதிஞ்ஞாசந்நியாசம் (மேற்கோள்விடுதல்), ஏதுவந்திரம் (வேற்றேது), அர்த்தாந்திரம் (வேற்றுப்பொருள்), நிரர்த்தகம் (பொருளின்மை), அபார்த்தகம் (பொருளுணரப்படாமை), அவிஞ்ஞாதார்த்தம் (பொருட்போலி), அப்பிராப்தகாலம் (காலம்பெறுமை), நியூனம் (குன்றக்கூறல்), அதிகம் (மிகைபடக்கூறல்,) புநருக்தம் (கூறியதுகூறல்), அநநுபாஷணம் (பிற்கூற்றின்மை), அஞ்ஞானம் (அறியாமை), அப்பிரதிபை (விடைதெரிந்தும் விளங்காமையாற் சும்மாவிருத்தல்), விக்ஷேபம் (தனக்கு வேறுகாரிய மிருக்கின்றதெனக் கூறி வாதத்தை நிறுத்தல்), மதாநுஞ்ஞை (தன் குற்றம் பரிகரிக்காது பிறன் குற்றங்கூறல்), பரியநுயோஜ்யோபேக்ஷணம் (எடுத்துக் காட்டற்குரிய தோல்வித்தானத்தை யெடுத்துக் காட்டாதிருத்தல்), நிரநுயோஜ்யாநுயோகம் (தோல்வியின் றியவனிடத்துத் தோல்விகூறல்), அபசித்தாந்தம் (சித்தாந்தப்போலி), ஏதுப்போலி என இருபத்திரண்டாம்.

முற்றிற்று.

* ஏதுவின்மைச் சமையென்னும் பாடமும் பொருந்தும்.

V. S. SUBRA[illegible]
TAMIL [illegible]